

இந்துநாதனும் அங்கயற்கண்ணியும்.

[இவர்களைப்பற்றி "அங்கயற்கண்ணி" நாவலில் பார்க்கவும்.]

ஓம் பரப்பிரம்மணே நம.

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :— திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம் - 1. | சென்னை: அக்ஷய ௵ மார்கழி ௴ 1௳ | இதழ் - 9. |
| Vol. 1. | 1926-ம் ௵ டிசம்பர் ௴ 16௳ | No. 9. |


## ஆநந்த தரிசனம்

"பக்தி யுண்டானால் முக்தி யுண்டாகும்" என்று பெரியோர் கூறி யிருக்கின்றனர். ஒருவனுக்கு நல்ல சரீரம், தனதான்ய ஸம்பத்து, மனைவி மக்கள், வீடு வாசல் முதலிய எல்லா மிருந்தும் பக்தியில்லையானால் அவன் ஜென்மம் வியர்த்தமாகும். ஒரு பக்தர் பக்தியில்லாத தனவானை மூக்கில்லாத ஸ்திரீக்கு ஸமானமாக உரைக்கின்றார். இன்னொரு பெரியவர் குபேர ஸம்பத்துடையவனாயினும் அவனிடம் பக்தி யென்னும் செல்வமில்லையேல் அவன் வாயில் உடனே மண் விழுந்துவிடும் என்கிறார். அவர் கூறியது போதாதென்று பின்வருமாறு மற்றொரு பக்தர் ஆக்ஷேபிக்கிறார். அதாவது பக்தி செய்யாதவன் வாயில் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய மண் விழுவது கூடாது. மண்ணால் பல உபயோகமான சாமான்களைச் செய்யலாம். அதினின்று பலவித தான்யங்களும் பச்சிலைகளும் பயிராகின்றன. ஆதலின் பக்தி ஹீனர்களின் வாயில் மண் விழாமல் தூசி விழுவது நன்று என்கிறார். இன்னொரு பக்தர் இதையும் ஆக்ஷேபிக்கிறார். ஒருவேளை பெரியோர்களின் பாத தூளியானது பரம துஷ்டனாகிய பக்திஹீனனது வாயில் விழுந்தால் அவன் ஒரு ஸமயம் நல்ல பதவியை யடைந்துவிடக் கூடும். ஆதலின் தூசி விழுவது நன்றல்ல. அது தக்க தண்டனையுமன்று,

பக்தி செய்யாதவன் வாயில் புழுக்கள் உண்டாவதுதான் தகுந்த தண்டனை யென்கிறார். இவ்விதமாகப் பல சான்றோர்கள் பக்தி ஹீனனைக் கடிந்து கூறி யிருப்பதாலும், பக்தி செய்வதால் ஞானம் முதிர்ந்து முக்தி கிடைக்குமாதலாலும், நாம் எப்போதும் ஈசுவரனை மறவாமல் அவருடைய பாதாரவிந்தங்களையே ஸதா தியானித்துக் கொண்டிருக்கக் கடவோம்.

* * *

"ஆநந்த மேது" என்ற கேள்விக்கு ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் ஆத்மாவே ஆநந்த மென்றார். புருஷன், மனைவி, மக்கள், தனம், பசு, உலோகங்கள், தேவதைகள், வேதங்கள், பூதங்கள் ஆகிய ஸகலமும் ஆநந்தமல்ல. புருஷனே ஆநந்த மென்றெண்ணிச் செல்லும் ஸ்திரீயை அப்புருஷன் தனக்குண்டான பசியினாலோ அல்லது வியாதியினாலோ இச்சியாமல் தள்ளிவிட்டால் அவன் ஆநந்த மாகானன்றோ? இவ்வாறே ஸ்திரீயை ஆநந்த மென்றெண்ணிச் சென்ற புருஷனை அவள் மனவருத்தம் அல்லது பிணி காரணமாக விரும்பாதிருந்தால் அவன் மனைவியை ஆநந்த மென்றாவது பிரியவஸ்து வென்றாவது சொல்வானா? மனைவியினிடமாகத் தோன்றும் ஆநந்தம் உண்மையாகத் தன்னுடைய ஆநந்தமென்று புருஷன் எண்ணிக் கொள்ளவேண்டும். முள்ளைப்போல் மீசை தைத்து குழந்தை யழுதாலும் அதைவிடாமல் முத்தமிடும் பிதாவுக்குத் தன்னுடைய ஆநந்தமே யல்லாமல் குழந்தையின் ஆநந்த மல்ல. நம்முடன் ஸந்தோஷப்பட அறியாத இரத்தின கனகாதிகளை நாம் அணிந்து மகிழ்வது நம்முடைய ஆநந்தமே யல்லாமல், ஐசுவரியாதிகளின் ஆநந்த மல்ல. ஸ்வர்க்கலோகம், பிரமலோகம் வேண்டுமென்கிற ஆசை என்பொருட்டே யன்றி மேற்படி லோகங்களுக்கு உபகாரமாக வல்ல. ஆதலின் ஸகல விஷயங்களையும் குறித்து தானே பிரிய வஸ்து வல்லாமல் விஷயங்கள் பிரிய வஸ்துக்களல்ல. ஆகையால் ஆத்மாவே ஆநந்தமாகிறது.

* * *

"மார்கழி மா—தவமிக்க மாதம்" என்பார். இம்மாதத்தில் ஒவ்வொரு தேவாலயங்களிலும் அதிகாலையில் பூஜைகள் நடக்கின்றன. ஜனங்கள் உதயத்திற்கு முன்னமே தெய்வ சிந்தனையோடு கூடிய குதூகலராகின்றனர். தத்தம் வீடுகளின் முன்னிடங்களில் அழகிய கோலங்களாலும் புட்பாலங்காரங்களாலும் பெண்மணிகள் அலங்காரம் செய்கின்றனர். நாகசுரக்காரர் மங்கல பாடகர் முதலியோர் இனிமையாக இசைபாடுகின்றனர். வைகுந்த ஏகாதசி, திருவாதிரை முதலியனவும் இம் மாதத்திலேயே வந்து ஜீவர்களைப் பாவத்தினின்றும் நீக்கிப் பரிசுத்தராகச் செய்கின்றது. தினத்துக்கொரு பாசுரமாக அம்மாத முற்றும் வைணவர்கள் திருப்பாவைப் பாசுரங்களைச் சேவிப்பர். எங்கும் உத்ஸவங்களும்

கோலகலமுமாகப் பரிமளிக்கும். இவற்றை யெல்லாம் சிந்தித்திடில் மற்ற மாதங்களிலும் மார்கழி மாதம் ஒரு தனித்த மாதம் என்பதும், ஒரு விசேஷித்த மாதம் என்பதும், பகவதாராதனையில் அது உயர்நலஞ் சார்ந்ததென்பதும் அம்மாதத்தின் ருசிகரத்தை நன்கு அனுபவித்த யாவரும் ஒப்ப முடிந்த உண்மை.

***

"அல்லாதார் ஆரோ அறியேன் பராபரமே" என்றார் தாயுமானவர். கருணையங் கடலாகிய பகவானுக்கு 'அல்லாதார்' என எவர் இருக்கப் போகின்றனர்? பாபிக்கு இரங்கி நல்வழிப் படுத்த வேண்டியவரும் அவரே. புண்ணிய ஸ்வரூபிகளை ஆட்கொண்டருளவேண்டியவரும் அவரே. அவ்வாறானபோது யாவரும் அவரது கிருபா நோக்கத்திற்குப் பாத்திரமானவர்கள் தான். எனினும், உறவு உறவு என்று உதட்டி னளவில் சொல்லிக் கொண்ட மாத்திரத்தில் ஆகிவிடுமோ? உபசரிக்கும் வகையில் உள்ளன்பு உணர்த்தி உவகை பொங்கிய உருவுடன் மலர்வதன்றோ உண்மையுறவு எனத் தகும். அதுபோல, ஸர்வ ஜீவ தயாபரரின் அருள் நோக்கிற்கு நாம் உரியவர்களா யிருப்பினும், அவ்வுரிமைக்குத் தகுதியுடையோராக நம்மைத் திருத்திக் கொள்ளுதலும் வேண்டுமன்றோ? இங்கு திருந்துதல் என்பது அவரை வழிபடல் என்பதாம்.

***

"பக்தி வலையிற் படுவோன் காண்க" என்றார் மணிவாசகர். பகவானை நம் வசப்படுத்த வேண்டுமாயின் அதற்குப் "பக்தி" என்னும் வலையை வீசினாலன்றி முடியாது. அந்தப் பக்தி வலையிற் பகவான் எவ்விதமும் அகப்படுவார். அதற்கேற்ப பக்தியும் அகத்தே ஆழத்தில் நன்கு ஊன்றப் பெறவேண்டும். அவரைப் பக்தி பூர்வமாய் வாயாரத் துதித்து உள்ளன்பு பூண்டு வழிபடுவோர் அவரது அருளுக்குப் பாத்திரமாவர்.

***

"பக்திலேனி பூஜாலேமிடிகி ஓ மனஸா மனஸா!" ஓ மனமே! மனமே! பக்தியில்லாத பூஜை எதற்கு என்று வட நாட்டிலிருந்த ஒரு பக்தர் கூறியிருக்கின்றார். வீண் டம்பப் பக்திமான்கள் எத்தனையோ கோடிபேர் இவ்வுலகி லிருக்கின்றார்கள். அவர்களெல்லாம் பக்தி யுடையவர்களா? அல்ல. திருஷ்டாந்தமாக இம்முறை வைகுந்த ஏகாதசி விரதத்தை யநுஷ்டிக்கப் புகுபவர்களையே எடுத்துக்கொள்ளலாம். எத்தனைபேர் சீட்டாடுவர்! எத்தனைபேர் சொக்கட்டான் சோழி சதுரங்கத்தில் கலப்பர்! எத்தனைபேர் தாசி வேசிகளுடன் கண் விழித்திருப்பர்! எத்தனைபேர் நாடகாலங்காரங்களில் நாளைக் கழிப்பர்! இப்படிப் பலர் பல விதங்களில் மனதைச் செலுத்தியிருந்தால் இவர்கள் காக்கும் விரதம் என்ன பயனைத்

தரப்போகின்றது? ஆதலின், பகவானைப் பஜிப்பவர்கள் விரத நாட்களில் வேறு விஷயங்களில் மனதைச் செலுத்தாமல் அவரது திருவடிப்போதுகளை மறவா திருக்கவேண்டி அவர்களுக்கும் கூறி, நாமும் கடவுளைத் தியானிக்கின்றோம்.

***

"உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்." கிறிஸ்துவர்கள் அரசனுக்கு முடிசூட்டும்போது ஒருவித பரிசுத்தமான எண்ணெயை மன்னனுடைய சிரசிலும், மார்பிலும், கைகளிலும் ஊற்றித் தேய்க்கிறார்கள். உடனே "பரிசுத்த ஆவியே இங்கே வா" என்ற மந்திரத்தை உச்சரிக்கின்றனர். இவ்விதமே ஹிந்துக்களும் பட்டாபிஷேக காலத்தில் பலவித தீர்த்தங்களால் அரசனுக்கு அபிஷேகம் செய்விக்கின்றனர். எந்த மதஸ்தரிடமும் ஜலத்தால் பரிசுத்தம் செய்வது சாஸ்திரீயமா யிருக்கிறது. ஆகவே, திவ்விய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து பாபத்தைப் போக்கிக்கொள்வது மூடபக்தி யென்பானேன்? முன்னோர்கள் ஏற்படுத்திய ஒவ்வொரு கர்மத்துக்கும் தகுந்த காரணமிருக்க, அதைத் தீர விசாரியாமற் குறைகூறுவது அவிவேகமேயாம். புற மதஸ்தர்கள் தேவ ஸன்னிதானத்தில் முழங்காலிட்டால் நாம் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறோம். இதனால் நாம் ஈசுவரனுக்குச் செய்யும் வணக்கம் அதிக சிலாக்கியமென்று தெரியவில்லையா? புற மதஸ்தர்கள் தங்களின் வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு ஸத்தியம் செய்கின்றனர். நாம் பாரதம், இராமாயணம் முதலியவற்றைப் பூஜிப்பதுதானா மூடபக்தி! இனியேனும் நம்முடைய ஆசாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆதார முண்டென்று நம்பி இகழாதிருக்கக் கடவோம். இகழுவோரைப் புகழாதிருப்பதும் நமது கடமையேயாம்.

***

"பக்தி வியாபாரம்." இக்காலத்திலும் ஈச்வரனிடம் வியாபாரம் செய்யும் பக்தர்கள் பலர் உளர். இது அவிவேகம். ஜெகத் பிதாவாய் விளங்கும் பகவான் தம்முடைய குழந்தைகட்குச் செய்யும் உதவிக்காகப் பிரதிஉபகாரத்தையேனும் பிரதிபிரயோஜனத்தையேனும் விரும்புவாரோ? ஒருபோதும் விரும்பார். பிதாவினிடம் நன்றி பாராட்டுவதுபோல், மக்களாகிய நாம் பரம பிதாவான ஸர்வேச்வரனிடம் பக்தி பாராட்ட வேண்டும். அதாவது, அவரது அருளை வியந்து கொண்டாடித் தியானிக்கவேண்டும். இவ்விதமின்றி-எனக்கு 50 ரூபாய் வரும்படி செய்வித்தால் உமக்கு 5-ரூபாய்க்கு அபிஷேகம் செய்கிறேனென்று பிரார்த்திப்பது வியாபாரமன்றோ? ஒரு வகையான பொருளைச் செலவழித்தாலும் பாதகமில்லை. பலவித பலிகளைக் கொடுப்பதாய் வேண்டிக்கொள்ளும் மனிதர்களின் அறிவீனத்தை என்னென்போம்? சில வருடங்களுக்கு முன் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஒரு மனிதன் பகைவரை வென்று

வந்தால் தன் கண்ணுக்குத் தென்படும் பெண்ணைத் தான் வணங்கும் வன தேவதைக்குப் பலி கொடுப்பதாக வேண்டிக்கொண்டான். அவ்வாறே ஜெயம் கிடைத்துத் திரும்பி வருகையில் இவனுடைய துரதிர்ஷ்டத்திற்கேற்ப ஸர்வாபரண பூஷிதையாய் ஒரு பெண் எதிர்பட்டாள். இவள் யார்? வேண்டிக்கொண்டவனது அன்பிற்குரிய புத்திரி. ஐயோ! அவன் பட்டபாட்டை யார் சொல்ல முடியும்? அனலிற்பட்ட மெழுகைப்போல் அவன் மனம் உருகியது; அந்தகாரத்தி லழுந்தியது. எனவே, பலி முதலிய பக்தி வியாபாரங்கள் செய்யாமல், பகவானை சுத்த ஹிருதயத்தோடு போற்றுவது நன்மையைத் தந்து சிறந்த பக்தியை முதிரச் செய்யுமென்கிறோம்.

—பயங்களைப்

---

**அந்த உறவில் மனைவி! இந்த உறவில் சிறியதாய்!**

அவனுக்கு அந்தப் பெண்ணைப் பேசிப் போனபின்பு, அவனது சிறிய தகப்பனார் வேறொரு முறை கொண்டு தனக்கு அந்தப் பெண்ணை நிச்சயார்த்தம் செய்து விட்டார். அவனுக்கு மனைவியாகவேண்டிய அந்தப் பெண்ணே இப்போது அவனுக்குச் சிறிய தாயார்!

உலகத்தில் அவனவன் தனது போஷணார்த்தமாகவும், தன்னைச் சேர்ந்தவர்களுடைய போஷணார்த்தமாகவும் பணத்தைச் சம்பாதிக்க முயற்சி செய்யவேண்டியதுதான். ஆனால், பணமே தெய்வமென்று தீர்மானம் செய்து அதை எவ்விதமாயாவது சம்பாதிப்பதே காரியம் என்போமானால், களவு செய்தேனும் சம்பாதிக்கவேண்டியதா வென்ற கேள்விகள் பிறக்கும். "திரைகட லோடியும் திரவியம் தேடு" என்பது பணத்துக்காக முயற்சி அவசியம் என்று காட்டிற்றே ஒழிய, அவசியமானால் உன் மனச் சாட்சியையும் சிரேஷ்டமான தர்மங்களையும் துறந்தேனும் பணத்தைச் சம்பாதிக்கச் சொல்லவில்லை. ஆகாரம் நமக்கு அவசியமானதென்கிற காரணத்தால் நமது குழந்தைகள் கையிலிருக்கும் பக்ஷணத்தை நாமே பிடுங்கிப் புசித்துவிடலாமா? அது எப்படி தோஷமோ அப்படியே ஒருவனை வஞ்சித்தாவது ஹிம்ஸித்தாவது அடைகிற திரவியமும் அந்தத் தோஷத்தின் பலனை எதிர்பார்க்கச் செய்துவிடும். அது பிரத்தியக்ஷமாய்த் தெரியாவிட்டாலும் பின்னுக்கு நாசம் நேர்வது திண்ணம். இதை நிதானித்துக் கவனிப்பவர்களுக்கு அப்போதைக் கப்போது ஒருவிதமாய்த் தெரியவரும். எனவே திரவிய சேகரம் நியாய மார்க்கத்திலிருக்கவேண்டும். தேடும் செல்வத்தில் அவரவர் சக்திக்குத் தகுந்தபடி தம் தாய்த் தேசத்தின் தொண்டுக்கும் சிறிது பங்கு கொடுக்கவேண்டும்.

# ஆநந்த குண போதினி

அக்ஷய௵ மார்கழி௴ 1௳


## பொது ஜனசங்கத்தில்

## நமது உணர்ச்சிக் குறைவும் சுயநலமும்.

நாம் தூங்கும் பொழுதும் விழித்துக்கொண் டிருக்கும் வேஷகம் பொழுதும் எப்பொழுதும் நம்முடைய மனதை வாதிக்கிற விஷயம் ஒன்றிருக்கிறது. அதாவது, நம் தேசத்தார் மதங்களெல்லாவற்றிலும் சிறப்புற்ற ஒரு மதத்தின் அரிய பெரிய சிறந்த தத்துவங்களைக் கைக்கொண்டும், நீதி நூலில் இனி இதற்கு மிஞ்சிய தில்லையென்று சொல்லும்படியான உத்தம அறிவு பொருந்தியும் இருக்க, அநேக நூற்றாண்டுகளாய் சுதந்திர வாழ்க்கை பெறாமல் ராஜீயத்தில் எவ்வித ஸ்வயேச்சையு மின்றி வாழ்வதற்குக் காரணம் என்னவென்பதுதான்.

தேகசக்தியில் நம் தேசத்தார் எத்தேசத்தாருக்கும் தாழ்ந்தவர்களல்ல. பொதுவாய் நம் தேசத்து ஜனங்கள் திடசரீரிகளாயும் எவ்வித சரீர கஷ்டத்தையும் தாங்கி ஊக்கத்தோடு வேலை செய்யத் தக்கவராயு மிருக்கின்றனர். எவ்வித அற்ப சொற்ப ஆகாராதிகளையும மனவிருப்போடும் உண்டு, அற்ப உடையை உடுத்து காற்று உலாவாத அதிக ஜனநெருக்கமுள்ள வீடுகளில் வசித்தும், உலகத்தில் மிக்க சிறந்த சிப்பாய்களென்று பெயர் விளங்கும் சிப்பாய்களுக்குக் கிஞ்சித்தும் பின் வாங்காத சிப்பாய்களா யிருந்திருக்கிறார்கள். இராணுவத்திலாகட்டும் மற்றவைகளிலாகட்டும் எவ்வளவோ உயர்பதவிகளைத் திறமையுடன் நிர்வகித்துமிருக்கிறார்கள்.

மதவிஷயத்தைப் பார்ப்போம். அதிலும் நமக்கு ஒப்பாரில்லை. இன்னும் இன்னார் செய்ததென்று தெரியாது. உபநிஷத் செய்த மகான்களென்ன? புத்தர் என்ன? சங்கரர் என்ன? இராமாநுஜர் என்ன? இவர்களுக்கு இணையாக எத்தேசத்தாரை யாவது எடுத்துக்காட்ட முடியாது. பெருந்தன்மை பொருந்தி பெருந் தர்மத்தையே கொண்டு சித்த விர்த்தியோடு செய்த பெரிய கண்ணியர்களுக்குக் குறைவோ? அவர்களுடைய சரித்திரம் இன்பத்தைத் தரும் சித்திரக் கதைக் கொப்பாயிருக்கிறது.

இப்படி யெல்லாம் பெருமையில் உயர்ந்த நாம் சென்ற ஒரு நூற்றாண்டாய் எவ்வளவோ கற்றும் இதர தேசத்தவர்களின்

பந்தியில் தாழ்வானேன்? நமது பலம் போதாதென்றுணர்ந்து அதைப் பெருக்கத் தேசாபிமானத்தால் ஒன்று கூடிக் கூப்பாடு போட்டு, தேச அரசாட்சியில் சீர்திருத்தங்கள் தேவையென்று எவ்வளவோ விண்ணப்பங்கள் கொடுத்தும் சுதந்திர மடைய விரும்பும் விஷயத்தில் கொஞ்சங் கூடப் பயனடையாதவர்களாய்ப் போவானேன்? நம்முடைய கூப்பாடுகள் துரைத்தனத்தாரின் மனதிற் பதியாமலும், நம்முடைய விண்ணப்பங்கள் கவனிக்கப் படாமலும் நம்முயற்சி யெல்லாம் வீணாவதற்குக் காரணமென்ன?

அரசாட்சி சங்கதியை விட்டு விடுவோம். நம்முடைய ஆதீனத்தி லிருப்பதுவும், துரைத்தனத்தார் பிரவேசித்து இடையூறு யாதொன்றும் செய்யக் கூடாததுமான பிரஜா காரியங்களைப் பார்ப்போம். இந்தக் காரியங்களில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று ராம்மோகன்ராய், தயானந்த சாஸ்வதி, ஈசுவர சந்திர வித்தியா ஸாகரார், ரானடே இந்தப் பெரியோர்கள் பகீரதப் பிரயாசைப்பட்டும் அதற்குத் தக்கபடி பலனடையாமற் போனதற்குக் காரணமென்ன?

நம்முடைய மதக் கோட்பாடுகளில் சொல்லப்படும் அன்னியோன்னியபாவங்கள் இழிவானதோ? இல்லை. இவ்வித சுயநயம் பாராட்டும் தன்மையையும், தம் தம் காரியத்திலேயே திருஷ்டியாயுள்ள வெறுக்கத் தகும் பான்மையையும் நம் மகான்கள் நமக்குப் போதித்தனரோ? இல்லை. தேசாபிவிருத்தி, பொதுஜன சேவை முதலியவைகளைப்பற்றி நம் சாஸ்திரங்களில் சொல்லப்படவில்லையோ? எவ்வளவோ எழுதப்பட் டிருக்கிறது. அவ்வாறாயின், தேசாபிமானம் என்னும் உத்தம குணம் போதிய அளவுக்கு நம் நெஞ்சில் ஊன்றப் பெறாததேன்? பொதுஜன நன்மையில் சிரத்தைக் குறைவு மிகுவானேன்?

தேச நலத்திற்குக் கவலைகொண்டு முன்வருவோரில் அநேகர் தங்களின் சொந்தப் பிரயோஜனத்திற்குக் கெடுதலென்று தெரிந்தால் கிஞ்சிற்றும் பொதுப் பிரயோஜனத்தை நாடார். மிகவும் கல்வியில் தேர்ந்து கர்வம் தலைக்கொண்டு திரிந்தும், அவ்வளவு கல்வியில் தேர்ச்சி பெறாத தோழர்களின் குற்றங்களை எடுத்துக் காட்டுவதில் தம் காலத்தைக் கழித்தும், ஹெர்பர்ட் ஸ்பென்ஸருடைய தத்துவத்திலும், — ஹக்ஸிலியின் சாஸ்திரத்திலும், — ஷேக்ஸ்பியர்-ஜான்ஸன் முதலிய கவிஞாது பொருட்சுவை சொற்சுவை பொருந்திய கல்விகளிலும் தேர்ச்சியுள்ளோமென்று தேசமெங்கும் முறசடித்தும் — இவ்வாறு திரிகிறார்களே தவிர, சொற்பமாவது பொதுஜனப் பிரயோஜனத்தைக் கருதும் உணர்ச்சியுடையவர்களாயில்லையே! ஏன்?

பாலிய விவாகத்தைத் தாம் கற்ற வாக்குச் சாதுர்யங்களை யெல்லாம் வைத்து மிகக் கடிந்து கூறுகிறவர்கள், அதே நிமிஷத்தில் தம்முடைய ஏழு வயதுள்ள கன்னிகைக்கும் அதே வயதுள்ள பையனுக்கும் விவாகம் செய்ய நாள் குறித்திருப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். தலைவிரிகோலமாய்த் தேசாபிமானத்தைப் பற்றிப் பிரயாசைப் படுவதுபோலக் காண்பிக்கிறவர்களில் அநேகர் ஒரு பொது நன்மையின் காரியத்திற்கு உதவி கேட்டால் "இல்லை" என்று கண்டிப்பாய்ச் சொல்வதையும் கண்டிருக்கிறோம். ஐச்வரியத்தில் புரண்டு உன்னத மாளிகைகளில் அமர்ந்து கால நியமப்படி திட்டமான நல்ல வரும்படியும் அடைந்து வருகிற சீமான்கள் அடுத்த வீட்டு ஏழை அறுத்துக்கொண்ட விரலுக்கு சுண்ணும்பு கொடேனென்பதையும் கவனித்திருக்கிறோம். தம் தேசத்தாரொருவன் ஐரோப்பியரொருவரால் கொடுமையாய் அடிக்கப்பட்டு வருந்தும்போது அதைப் பார்க்காததுபோல் விழி குருடராய்ப் போகும் சுதேசாபிமானிக ளெத்தனைபேர்? தமக்குச் சொந்த லாபமில்லாத காரியங்களில் விரல் அசைக்கிறதேயில்லை. ஒரு கனவானிடத்தில் நீர் போய் இன்ன பொது நன்மைச் சங்கத்தில் சேர வேண்டுமென்று கேட்டால், அவர் உம்மிடத்திலேயே அதனால் தனக்கு என்ன லாபம் என்று உடனே கேட்பார். அவ்விதம் கேட்காராயின், தமக்குள்ளேயாவது அதனால் என்ன லாபம் கிடைக்குமென்று நினைத்துக் கொள்வார்! ஏதாவது மத விஷயமான தூண்டுகோலாலல்லாமல் பொது நன்மைக்கான காரியங்களில் இறங்குவோர் வெகு சொற்பம். இந்த சொற்பத்திலும் தமது பெயர் பிரபல கீர்த்தியாய் வெளிப்படாத விஷயங்களில் ஒரு காசைக்கூடத் தரப் பலர் முன்வரார்! ஏதனால் இப்படி? எக்காரணத்தால் இந்தத் தரித்திர புத்தி? இதற்கெல்லாம் பதில் பின் வருவதே :—

நாம் தனித்தனியே சொந்தப் பிரயோஜனத்தைக் கவனிக்கும் தன்மையையும், பொது சங்கத்தின் காரியங்களில் முயலவேண்டுமென்கிற உணர்ச்சியற்ற ஸ்வபாவத்தையு முடையோம். நமக்குள் சுயநலம் பாராட்டுதலும், பேராசையும், எள்ளுக்கணக்கு பார்ப்பதும் நம்மை மூடியிருக்கின்றது. நம்மவரில் பெரும்பான்மையோர் பொது சங்கதியைப்பற்றியாவது தேச சங்கதியைப் பற்றியாவது யோசிக்கும் திறமையற்றவர்களாவார்.

அடிக்கடி நாம் தேசாபிமான முடையோமென்று வெளியில் காட்டுகிற தேசாபிமானத்தில், உண்மையாகப் பத்தில் ஒரு பங்காவது நம் தேசத்தாரிடத்தில் இருந்திருந்தால் எந்தத் துரைத்தனத்தாரும் அவ்வித உண்மையான தேசாபிமானிகளின் வேண்டுதல்களை நிராகரிக்க முடியாமல் ஏற்றுக்கொள்ளும்படி நேரிட்டுவிட்டிருக்குமன்றோ?

ஒரு சங்கத்தாருடைய உயர்வும், தாழ்வும், அச்சங்கத்திலுள்ள ஒவ்வொருவரும் அச்சங்கத்தின் பொது நன்மையைக் கருதிய காரியங்களை அறிந்து செய்வதற்குத் தக்கதாகவே யிருக்கிறது. இது எவரும் எளிதில் அறியக்கூடிய விஷயம். எவ்வளவுக் கெவ்வளவு ஒவ்வோருவரும் தம் கூட்டத்தாருடைய பொது நன்மையை அறிந்து அதற்கு வேண்டியதைச் செய்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அக்கூட்டத்தார் உயர்வை யடைவார்கள். இந்த உணர்வு தான் நம் தேசத்தாருக்குத் தேவை. அதில்லாமைதான் நம் தேசத்தார் க்ஷேம மடையாததற்குக் காரணம். இந்த நம்முடைய பிழையை நாம் உணர்ந்தாலல்லாமல், மற்றபடி யுகக்கணக்காய்க் கதறினாலும், இப்பொழுது இருக்கும் நம் நிலைமையினின்றும் ஒரு அங்குலம்கூட மேலே செல்லமாட்டோம்.

---

# போகி பண்டிகை

போகத்திற்கு இடமான காலம் போகி யென்பது. போகம் என்பது சுக சௌக்கியமான நன்மைகளை அனுபவித்தலாம். புராண பரம்பரையாய் இஷ்ட சித்தி பெற்ற, நாளாயிருப்பதினால், மார்கழி மாதத்தின் கடைசியான தினத்திற்கு "போகி" என்று பெயர் உண்டாயிற்று. எவ்வாறெனில் :—

ஒரு வருஷத்திற்கு அயனம் இரண்டு. அவை உத்திராயணம், தட்சணையணமாம். சூரியன் வடபாதி கோளத்தைச் சார்ந்த காலம், தென்பாதி கோளத்தைச் சார்ந்த காலமெனப் பொருள்படும். உத்தராயணம் என்பது மகர முதல் மீனமீறாக வுள்ள ஆறு ராசிகளில் சூரியன் சஞ்சரிக்குங் காலம். தட்சணையண மென்பது, கடக முதல் தனுசு ஈறாகவுள்ள ஆறு ராசிகளில் சூரியன் சஞ்சரிக்கும் காலம். அதனால் உத்தராயணம் பகலாகவும், தட்சணையணம் இரவாகவும் பாவிக்கப்படும். இராக்காலத்தின் கடைசி நேரம் பகல் காலத்திற்கு விடியற்கால மென்றாற்போல, தட்சணையணத்தில் சூரியன் சஞ்சரிக்கிற கடைசி மாதம் மார்கழியானது, தை மாதத்திற்கு விடியற் காலம் போல இருக்கின்றது. நரருக்கு ஒரு வருஷம் போன்றது தேவதைகட்கு ஒரு தினமாகின்றது. அதனால் மார்கழி மாதம் தை மாதத்திற்கு விடியற்காலம் போலாம். இந்த விடியற்காலமாகிய மார்கழியில் நீராடி, கடவுளைப் பூஜித்து, ஸ்தோத்திரஞ் செய்து வருவது உத்தமமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

---

# ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி

## உத்ஸவ விளக்கம்.

தென்னிந்தியாவிலுள்ள வைஷ்ணவ திவ்ய தேசங்களில் ஸ்ரீரங்கம் பிரதமமானது. வட இந்தியாவின் பல மாகாணங்களில் வசிக்கின்றவர் தெற்கே யாத்திரையாக வரும்பொழுது ஸ்ரீரங்கத்தைத் தரிசியாது செல்லார். இத்திருப்பதியில் அநேகமாக எல்லா மாதங்களிலும் பருவத்திற் கேற்றவாறு உத்ஸவங்கள் ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகின்றன. அவற்றுள் மார்கழி மாதம் நடைபெறும் 'திருவத்யயன உத்ஸவம்' (வைகுண்ட ஏகாதசி உத்ஸவம்) மிகவும் பிரபலமானது. இத்திருநாள் இருபத்தொரு நாட்கள் நடைபெறுவது; இதற்குப் பக்தர்கள் திரள் திரளாக வந்து கூடுவர்.

இவ்விழா "பகல் பத்து" "இராப் பத்து" என இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் பத்து நாட்கள் வரை நடைபெறும். இருபத்தோராம் நாள் "ஆழ்வார் மோக்ஷம்" என்ற வைபவத்துடன் பூர்த்தியடையும்.

கார்த்திகை தீபத்தன்று திருவரங்கப் பெருமான் தம் மடியார்களுக்கு இவ்விழாவின் ஆரம்ப தினத்தை யறிவித்து வரவேற்கும் நிருபம் விடுப்பதான ஐதீகம் நடைபெறும். இதற்குக் "கையேந்திய சேவை" எனப் பெயரிட்டழைக்கின்றனர். அரங்கநாதனுடைய ஆணையின்படியே, ஆழ்வார்களும், அடியார்களும் இத்திருநாள் ஆரம்பமாகும் முதல் நாளே ஸ்ரீரங்கத்தை வந்தடைகின்ற ரெனக்கொண்டு, அன்று "அடியார்கள் வந்து விட்டனரா?" என்று சரி பார்க்கும் ஐதீகம் நடைபெறுகின்றது. இதை "திருநெடுந்தாண்டகம்" என்பர்.

பகற் பத்து திருநாள் பத்து நாட்களிலும் ஸ்ரீரங்கநாதர் அதிகாலையிற் புறப்படுவார். இத்திருநாளில் அழகிய மணவாளன் காலையில் புறப்படும்போது கர்ப்பக் கிருஹத்தைத் தாண்டிய உடனே ஒருவித நடை நடந்து திரும்புவர். இப்பகல் பத்து உத்ஸவ நாட்களில்தான் இது நிகழ்த்தப்படுமாம். விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் பத்தாம் நாள் விழாவன்று இக்குலுக்கு நடையைக் கண்டு ஆநந்திக்கக் கருதி, ஒரு முறை ஆநந்தித்து இரண்டாவது முறை காண இச்சைகொண்டு, 'இங்கோ சாரி' (இன்னொரு தடவை) என்று தெலுங்கில் கேட்க, 'ஒச்சேடிகி' (அடுத்த வருஷத்திற்கு) என்று தெலுங்கில் ஸ்தலத்தார் பதிலளித்ததாக ஒரு சிறு கதையு முண்டு. இவ்விதம் புறப்பட்டுக் "கிளி மண்டபத்தை" யடைந்து பகல் முற்றும் அங்கு வீற்றிருப்பர். நம்மாழ்வார், உடையவர் முதலான பதினான்மரும் வந்து ஆங்கே வரிசையாக அமர்ந்திருப்பர். ஆங்கு பல நைவேதனங்களும் நடைபெறும். பின்பு, 'அரையர்' (விண்ணப்பிப்போர்) என்போர் தலையில் பட்டுக் குல்லா யணிந்துகொண்டு தசாவதார மஹிமையைப் பிரபந்தத்திலுள்ளவாறு முறையே பத்து நாட்களில் பூர்த்திசெய்வர். இங்கு நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலுள்ள "முதலாயிரம்", "திரு

மொழி" முதலான ஈராயிரம் பாசுரங்களை அபிநயத்துடன் அனுசந்திப்பர். இதை 'அரையர் சேவை' என்பர். ஒன்பதாம் நாள் "முத்துக்குறி" என்ற ஐதீகம் நடைபெறும். 'முத்துக்குறி' என்பதாவது 'ஆழ்வார் தம்மைப் பிராட்டியாகப் பாவித்து அரங்கநாதனிடம் காதல்கொண்டு இயம்பும் பாசுரங்களைச் சேவித்தலாம். இதை "நாயகா நாயகி விஷயம்" என்று சொல்லுவது வழக்கம். பிறகு மாலையில் ஸ்ரீரங்கநாதர் புறப்பட்டு நடனத்தோடு உலாவுவதுண்டு. இதை 'ஒய்யார நடை' என்பர். இதில் எட்டு, ஒன்பது, பத்தாம் திருநாட்களில் கூட்டம் அதிகரித்திருக்கும். இதன் பின்னர் 'படியேற்ற சேவை' என்பதாக எம்பெருமான், மேற்கூறிய அரையர்கள் பாசுரங்களைத் "தாலேலோ" என்று பாட, ஆடி ஆடி ஒவ்வொரு படியாக ஏறி ஏறி உட்செல்வது இந்த உத்ஸவத்தின் இருபத்தொரு நாட்களிலும் வழக்கம். இத்தரிசனத்தின் விசேஷமே விசேஷம்! இப் பகற் பத்தில் பத்தாவது நாள் மாலை 'மோஹனவதாரம்' என்பதாக, அரங்கப்பெருமானுக்குப் பெண் வேடஞ் சாத்தி, கருட மண்டபத்தையடைந்து ஆங்கிருக்கும் கருடாழ்வானைச் சுற்றிவந்து உட்செல்லும் வைபவம் நிகழும். இன்று கூட்டம் "எள்ளிட்டால் எள் விழாது" என்ற வழக்கிற்கு இலக்காயிருக்கும்.

இவ்விதமாகப் பத்து நாட்களும் முடிய, பதினோராம் நாள் அதிகாலையில் ஸ்ரீரங்கநாதன் "ரத்ன கவசம்" என்ற கவசமணியப் பெற்று, "ராஜ முடி" என்ற கிரீடத்துடன் மூன்றும் பிராகாரத்திலுள்ள "பரம பத வாசல்" வழியாய் இதற்கென்றே நிர்மாணித்துள்ள அலங்காரமான கொட்டகைக்குச் செல்வர். இந்த ரத்ன கவசத்தைச் சென்னையில் சுமார் 800 வருஷங்களுக்கு முன்னிருந்த ரெங்கப் பிள்ளை என்னும் ஒரு பெரிய கப்பல் வியாபாரி செய்துவைத்தா ரென்பது கோவிலார் வாயிலாகப் புலனுகின்றது. இக்கவசத்தை இன்றும் "ரங்கப் பிள்ளை கவசம்" என்றழைக்கின்றனர். இது அந்த வைகுந்த ஏகாதசி தினத்தன்று மட்டுந்தான் உபயோகிக்கப்படும். இத்திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்வாமி எழுந்தருளியுள்ள விமானம் பூலோகமாகவும், பரமபத வாயில் வைகுந்தத்தையடையும் வழியாகவும், அது தாண்டிய பின்னர் "அமிர்த சுரபி"யாக சந்திர புஷ்கரணியும், அதற்குப் பிறகு ஆயிரக்கால் மண்டபம் சாக்ஷாத் வைகுண்டமாகவும் விசேஷ தத்வார்த்தத்துடன் அமைக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வித அமைப்பு வேறெந்த க்ஷேத்திரத்திலுமில்லை என்பது மிகையாகாது. வைகுந்த ஏகாதசியன்று பெரிய பெருமாளுக்கு முத்தங்கி அணிவிப்பர். இதற்கு 'முத்தங்கி சேவை' என்பர். இது மஹா திவ்யமாயிருக்கும்.

வைகுந்த ஏகாதசியன்று அரங்கநாதர் கொட்டகைக்கு எழுந்தருளியதும் முதல் மரியாதையாக தீர்த்தம், பிரஸாதம் சடகோபம் முதலியவற்றை நாயக்க ராஜ வமிசத்தினருக்கு நடத்தப்படுகின்றது. அதைப் பெறுகிறவர் சட்டை, தலைப்பாகை முதலியவற்றை யணிந்து அவற்றோடும் கோயில் மரியாதையை ஏற்று வணங்குவர். இந்த மரியாதை முன்பு நாயுடு வம்ஸத்தினருக்குச் செய்யப்பட்டு வந்து, இப்பொழுது அவர்களின் மற்றொரு பிரிவினராகிய செட்டிமார்களுக்கு மாறியிருக்கிறது. இந்த மரியாதை நடந்தேறிய பிறகே கோயிலைச் சேர்ந்த மற்றவர்களுக்குச் செய்யப்படும்.

இராப்பத்தில் முதல் தினமான ஏகாதசியன்று மட்டும் அதிகாலையில் புறப்பாடு. அதன்பின் இரண்டாம் நாள் தொடங்கி பகல் சுமார் இரண்டு மணிக்கு பரமபத வாயில் வழியாக அடியாருள்ளம் கவர்ந்த அரங்கன் கொட்டகைக்கு (ஆயிரக்கால் மண்டபத்திற்குச்) செல்லுவர். பிறகு அங்கிருந்து இரவு பத்துமணி சுமாருக்கு புறப்பாடாகி ஆஸ்தானத்தையடைதல் வழக்கம். இவ்வாறு இரவு பெருமாள் மூலஸ்தானத்தை யடையும்போது இரண்டாம் பிராகாரத்தின் மேல் பாரிசத்தில் "ஏகாந்த சேவை" என்று ஒரு அரிய வைபவக்காட்சி நடைபெறுகின்றது. ஏகாந்த சேவையாவது பூர்வகாலத்தில் அரச குடும்பத்தார் அரங்கப் பெருமானை ஏகாந்தமாக சேவித்த வைபவமாம். நாயக்க மன்னர்களில் பெரும் வைணவ பக்தரான விஜயரங்க சொக்கநாத நாயக்கர் இவ்வேகாந்தத்தின் போது கையில் வீணை கொண்டு, நீலாம்புரி, ஸ்ரீராகம் முதலான ராகங்களாலான பல தெலுங்கு கீர்த்தனங்களை அரங்கன் முன்பாக எம்பிரானுடைய திவ்விய சரணாரவிந்தத்தி லீடுபட்டவராய் பாடிக்கொண்டே அடி அடியாக நடந்து, படியை யடைய, ஆங்கே "எச்சரி கேசாத நம்பு ஏகாந்த ரெங்கா" என்ற படியேற்றக் கீர்த்தனத்தைப் பாடிய பின்னர் பெருமாள் உட்செல்வதும் வழக்கம். அந்த சமயம் இராஜ குடும்பத்தினர் மட்டுமே அங்கு இருப்பாராதலின் இதற்கு 'ஏகாந்த சேவை" என்று பெயராயிற்று. முன் போலவே இச்சமயத்தில் இப்போதும் வீணைக் கச்சேரி நடைபெறுகின்றது. இதற்காக அவ்வீணை வித்துவான்களுக்கு சர்வ மான்யம் மன்னர்களால் விடப்பட்டிருந்ததாம். தற்காலத்தில் ஏகாந்த சமயத்தில் பெரும்பான்மையும் பணக்காரர்கள் மட்டிலும் உள்ளே செல்ல அநுமதிக்கப்படுகிறார்கள். இவ்விரவு பத்து திருநாட்களில் நாலாயிரத்தில் மூன்றுவது ஆயிரமான பாசுரங்கள் மேற்குறிப்பிட்ட அரையர்களால் அபிநயத்துடனும் சேவிக்கப் படுகின்றன.

இவ்விராப்பத்து ஐந்தாம் திருநாளன்று ஒரு அரிய காட்சி நடைபெறுகின்றது. அன்று நம்மாழ்வார் நாயக நாயகி பாவமாய்ப் பெண் உருவில் விளங்குகின்றார். அவருக்கு எதிரில் மூடப்பட்டிருந்த திரை யெடுக்கப்பட, அந்த சமயம் ஜெகஜ்ஜோதியாய்ப் பாணவேடிக்கைகள் நிகழ, அந்தப் பிரகாசத்தின் மத்தியில் ஸ்ரீரங்கநாதரை அப்படியே திருக்கைகளில் ஏந்தி ஆழ்வாருக்கு முன்பாக அவர் சேவித்துய்யுமாறு காட்டப்படுகின்றது. இது நிகழ்ந்ததும் மறு நிமிஷமே திரை விடப்பட்டு அரங்கநாதர் அந்தர்த்தானமாகின்றார். இந்த வைபவக்காட்சி எத்தகையோரையும் பக்தி வலையிற் கட்டுண்டுவிடச் செய்யும். இவ்வுத்ஸவத்திற்கு 'நம்மாழ்வார் மோஹினி அவதாரம்' என்பர்.

இனி, இராப்பத்தின் எட்டாவது தினத்தன்று "வேடர் பறி" என்ற உத்ஸவம் நடைபெறுகின்றது. இன்று, கள்வர் தலைவனை திருமங்கையாழ்வாரை, ஆட்கொள்ளத் திரு உள்ளங்கொண்ட ஸ்ரீரங்கநாதன் ஸர்வாலங்கார பூஷிதராய்ச் செல்ல, திருமங்கை மன்னன் பெருமாளைப் பிடித்து அவர் திருமேனியிலுள்ள ஆபரணங்களை யெல்லாம் களைந்து கொண்டே வரும்போது, எம்பெருமான் திருவடியிலிருந்த மிஞ்சியைக் கழற்ற முடியாமல் பல்லால் கடிக்க, சர்வேஸ்வரனின் பாதாரவிந்தங்களில் ஆழ்வாரின் சிரசானது பட்ட மாத்திரத்தில் ஞானோதய முண்டாகி, "நான் கண்டு கொண்

டேன் நாராயணா வென்னு நாமம்" என்று முடிவுறும் பாசுரங்களை அருளிச் செய்து, அவனுக்கே தொண்டு செய்ய வழி பட்டனர் என்பதான வைபவம் பிரத்தியக்ஷ ரூபமாய் நடத்திக் காட்டப்படுகின்றது. இத்தினத்தன்று ஜனத் திரள் அதிகமாயிருக்கும்.

பின்பு, பதினோராம் நாள் திருநாளன்று "இயற்பா ஆயிரமும்" நடனத்துடன் அரையர்களால் பாடப் பெறும். இன்று ஆழ்வார் விக்ர ஹத்தை ஸ்ரீரங்கநாதர் திருவடிகளி லெழுந்தருளப் பண்ணி முக்தி கொடுக் கும் ஐதீகத்தை நடத்தி "இயற்பா சாத்துமுறை" என்று அன்றைய உத்ஸவத்தைக் குறிப்பிட்டுப் பூர்த்தி செய்கின்றனர்.

"பகற்பத்தின் 10-நாட்களில் பரமபத நாதனின் திவ்ய வைபவச் சரித்திரங்களி லீடுபட்ட அடியார்கள் 11-ம் நாளாகிய ஏகாதசியன்று பரமபத வாயிலாக ஸ்ரீ வைகுண்டத்தை யடைந்து லக்ஷ்மி ஹிருதய கமல வாஸனாயாங்கே நித்யவாஸம் பண்ணும் எம்பெருமானுடைய சரணார விந்தத் திற்குத் தொண்டுபுரியும் பரம பாக்யத்தைப் பெறுகின்றனர்" என்ற கருத்தே இவ்விழாவை நிகழ்த்துவதின் முக்கிய நோக்கமாம். இந்த உத்ஸவம் தென்னிந்தியாவில் மிகவும் பிரபலமானது.

S. V. வரதராஜ ஐயங்கார்,
"சரஸ்வதி நிலயம்" உறையூர், திரிச்சி.

---

# மதிப்புரை

## 1927-ம் வருஷத்திய "காக்ஸன் டைரி"

[சென்னை பிரபல புஸ்தக வியாபாரிகளான மெஸர்ஸ் வி. குமாரஸாமி நாயுடு அண்ட் ஸன்ஸ் அவர்களின் உயரிய பதிப்பு விலை அணா 12. சென்னை சின்னதம்பித் தெரு, 27, இலக்கமுள்ள விலாஸத்தில் கிடைக்கும்.]

இனி வரும் புது வருஷமாகிய 1927-ம் வருஷத்தின் "காக்ஸன் டைரி" வழக்கம்போல் முன்னதாக வெளி வந்துள்ளது. இது புதிய எழுத்துகளில் உயர்ந்த கடிதத்தில் மிகு நேர்த்தியாய்ப் பதிப்பிக்கப் பட்டு அழகிய காலிகோபைண்டுடன் கண்ணைக் கவரும் தன்மையதாய் ஒளிர்கின்றது. பென்ஸிலும் அட்டையில் அறையும் கூடியது. வெளி அழகைப்போல் உள்ளுக்கும் ஸர்வ ஜனங்கட்கும் பிரயோஜனகரமான விஷயங்கள் அனைத்தும் சார சங்கிரகமாய்த் தொகுக்கப்பட்டு, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் மூன்று பாஷைகளில் பஞ்சாங்கமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கிருகஸ்தாசிரமத்திற் கான பஞ்சாங்க விவரங்களும் பல வகைக் குறிப்புகளும் விசேஷமாய் ஆராய்ந்து அவசியமானவை யாவும் இதில் அடக்கப்பட்டுள்ளது. பண்டிகை, விரதாதிகள், உத்ஸவங்கள்-இன்னும் பலவும் இதில் விவரமாய்ச் சொல்லப்பட்டுள்ளது. உண் பொருள் செரிக்குங் காலம் என்ெருரு குறிப்பும் இதில் உளது. ஆறு வித பாஷைகள் தேதி விவரங்களோடும் தினத்திற்கு ஒரு பக்கமாகத் தினசரியும் நன்கு அமைந்துள்ளது. மை ஊறாத நல்ல திக்கான காகிதம். நமது அன்பர்கள் இந்தப் புது வருஷ டைரியைப் பெற்று இன்புறுவாராக.

# இயந்திர தெய்வம்

ஒரு விநோதக் கதை.

(396-ம் பக்கத் தொடர்ச்சி.)

மறுநாட் காலையில் காண்டவன் தன்னை மறுமுறையும் காத்து ரக்ஷித்த யந்திர தெய்வத்தை வணங்கினான். அந்த யந்திரமோ மானிடவுலகையே லக்ஷியம் செய்யாமல் தன் வேலையை வெகு வேகமாய்ச் செய்தபடி இருந்தது.

மானேஜர் அன்று முதல் இரவில் அங்கு இருப்பதில்லை. காண்டவ பக்தனுக்கு அஞ்சியன்று. ஜேம்ஸ்பேய்க்குப் பயந்து தான். எனவே, இரவில் அங்கு இருப்பவன் காண்டவன் ஒருவனேயாம்.

ஒருவனுய்த் தனித்து இருக்கும்போதுதான் ஹிருதய உலகத்திலே எல்லா பேய்களின்—அச்சங்களின்—உருவங்களெல்லாம் தோன்றும். காண்டவன் தனித்திருந்த முதல் இரவில், மானேஜர் தன்னை மூக்கில் அடிக்கவில்லை யெனில் பிறகு தன்னை அறைந்தது யார் என்று வாய் விட்டுப் பேசியபடி யிருந்தான். இந்தப் பேச்சின் மத்தியிலேயே ஒரு சமயம் தன்னை தான் பலியிட்ட ஜேம்ஸே பேயாக வந்து அறைந்திருக்குமோ வென்றும் சொல்லிக் கொண்டான். அதே சமயம் அங்கு ஒரு ஸப்தம் எழுந்தது.

—“ஆம் அடா காண்டவா, நானே உன்னை அறைந்தேன்” என்று எவரோ சொல்வது போல் இருந்தது. உடனே காண்டவன்.

—“நீ யார்?” என்றான்.

“நானே ஜேம்ஸ் பேய் உன்னால் கொல்லப்பட்டவன்” என்று பதில் வந்தது.

“நானா கொன்றேன்? யந்திர தெய்வத்திற்கு அல்லவா அர்ப்பணம் செய்தேன். அது அல்லவா கொன்றது?” என்றான் காண்டவன்.

“ஏன் அதற்கு அர்ப்பணம் செய்தாய்?”

“யந்திர தேவதை பலி தரும்படி தன் சப்தத்தினால் எனக்குத் தெரிவித்தது. அதன்படி நடந்தேன். நான் அதன் பிரிய பக்தன்.”

“பேயினிடம் பக்தி உச்சரிப்பு உதவாது. என் இஷ்டப்படி நீ நடவாவிடில் உன் கழுத்தைப் பிசைந்து கொல்லுவேன். மூக்கில் அறைந்தது நினைவிருக்கிறதா?”

“ஐயோ! என்னைக் கொல்லவேண்டாம். சொற்படி நடக்கிறேன்.”

“தினமும் இரவில் இந்நேரத்தில் இங்கு இரு. விளக்கு வெளிச்சத்தில் என் உருவம் முகமூடி யணிந்து தெரியும். என்கைமட்டும் இறந்த ஜேம்ஸ்கை போல் தோற்றும். நான் உனக்குப் படிக்கக் கற்றுக் கொடுப்பேன். சரி

யாய்ப் படிக்காவிடில் பல்லை உடைப்பேன், நாக்கைக் கிழிப்பேன், கழுத்தைப் பிசைந்து கொல்வேன். தெரிகிறதா?''

"ஐயோ! கொல்ல வேண்டாம். அப்படியே படிக்கிறேன்."

"நீ படிப்பதை எவரிடமும் சொல்லக்கூடாது. உன்னோடு பேய் பேசியதையும் வெளியிடக்கூடாது.''

இப்படிப் பேய் கூறியதும், உடனே ஒரு வெளிச்சம் உண்டாகி அதில் ஜேம்ஸ் உருவம் காணப்பட்டு, மறு நிமிஷத்தில் விளக்கு அணைந்து உருவமும் சப்தமும் மறைந்தது.

***

பேய் மறையவே, காண்டவன் நடுங்கினான். யந்திர தெய்வத்தினிடம் சென்று பேயிடத்திலிருந்து தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று வணங்கினான். இரவு முற்றும் பல கனவுகளைக் கண்டான்.

மறு இரவு வந்தது. காண்டவன் மிகு பயத்துடன் பேயின் வரவை எதிர்பார்த்து இருளில் நின்று கொண்டிருந்தான். உடனே திடீரென்று ஒரு பிரகாசம்—அதன் மத்தியில் முகம் மூடிய ஒரு உருவம் தெரிந்தது. வலது கரம் மட்டும் மூடப்பட வில்லை. அதைக் காண்டவன் உற்றுப் பார்த்தான்; ஜேம்ஸின் கையும் அப்படித்தான் முன்பு இருந்தது.

பேய் ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தது. புஸ்தகம் 'பென்ஸல்' 'சிலேட்டு' யாவும் பேய் கொண்டு வந்திருந்தது. பேய்கள் சில இடங்களில் நன்மையும் செய்வதுண்டல்லவா. இப்படி ஒரு வருஷம் வித்யாப்பியாஸம் இரவில் நடந்தது. காண்டவனுக்குப் பேயினிடம் பயம் தொலைந்து பக்தி முதிர்ந்தது. பிரதிதினமும் பேயைப் பிரீதியோடு எதிர்பார்ப்பான். இரண்டு வருடமும் ஆயிற்று. காண்டவன் ஒரு ஜேம்ஸாக ஆகி விட்டான். யந்திர பலியான ஜேம்ஸுக்கு எவ்வளவு அநுபவமும் வித்யாசக்தியும் உண்டோ அவ்வளவும் கொண்டுவிட்டான். எல்லாம் இரவில் நடக்கிற பாடத்தின்—போதனையின் அற்புதமாகும். ஜேம்ஸ் பேய் இப்போது அவன் நண்பனாய் விட்டது. யந்திரம்—ஒரு போதும் தெய்வமாகாது—அது மனிதனுடைய கலாஞானத்திலிருந்து தோன்றிய ஒரு நிர்மாணம்—ஒரு சிருஷ்டி என்று ஜேம்ஸ் பேய் அவனுக்குப் போதித்தது. ஒவ்வொரு இரவும் யந்திரங்களைத் தனித்தனியாகப் பிரித்துக் காட்டியும் விளக்கிக் காண்டவனின் மூடபக்தி காற்றில் பறந்தோடும்படி செய்வித்தது.

***

காண்டவன் இப்பொழுது பழய மந்த மதியுள்ள காண்டவனன்று. மகா பெரிய மின்சார நிபுணனாகி விட்டான். ஆனால் புதிதாய் வந்துள்ள மானேஜருக்கு இந்த விஷயம் எதுவும் தெரியாது. இரவு சங்கதி வெளியில் எப்படித் தெரியும்? ஒரு நாள் யந்திரத்தில் ஒரு பெரிய பழுது உண்டாகி விட்டது. அதைச் சரி செய்யப் புதிய மானேஜருக்குத் தெரியவில்லை. உடனே காண்டவன் தான் பழுது பார்ப்பதாயும், யந்திரத்தைப் பாதி வரையில் தனித்தனியாகப் பிரித்தால், அப்போது உள்ளே ஏதாவது உடைந்திருப்பது தெரியும் என்றும் கூறினான். மானேஜர் ஓர் அற்பப் பணியாள் தனக்கு யோசனை கூறுவதா என்று ஒரு உதை கொடுத்தார். காண்ட

வன் மிக்க சாந்தமாய் செப்பனிட வேண்டிய வகையை மடமட வென்று ஆங்கிலத்தில் பேசிக் கொட்டி யளந்தான். அவனுடைய பிரஸங்கம் மானேஜரைப் பிரமிக்க வைத்தது. அவன் பிரியப்படி செய்ய உத்திர விட்டார். காண்டவன் யந்திரத்தைத் தனித்தனியே பிரித்து முக்கியமான பழுதைக் கண்டு பிடித்து உடைந்து போன ஒரு ஆணியை எடுத்து மானேஜருக்குக் காண்பித்தான். அவர் அதிசயித்துக் காண்டவனைத் தழுவிக் கொண்டார். பிறகு யந்திரமும் செப்பனிட்டானது. மகா கஷ்டமான இந்த வித்தையை எப்படிக் கற்ருய்? என்ருர் மானேஜர். அதற்குக் காண்டவன் ஜேம்ஸ் பேய் கற்றுக் கொடுத்த கதையைச் சொன்னுன். உடனே மானேஜர் அந்தப் பேயைப் பார்க்க மிகவும் விரும்பி வேண்டிக்கொண்டார். காண்டவனுக்கு அவர் பிரியத்தைத் தடுக்க மனமில்லை. அப்படியே காண்பிப்பதாய் ஒப்புக் கொண்டான்.

***

இரவும் வந்தது. மானேஜரும், காண்டவனும் இருட்டில் இருந்தபடியே ஜேம்ஸ் பேயின் வருகையை எதிர்பார்த்து நின்றனர். திடீரென்று ஒரு பிரகாஸம் தோற்றியது. ஜேம்ஸ் பேயின் உருவம் இவர்களுக்கு எதிரில் தெரிந்தது. மானேஜர் ஏற்கெனவே ஜேம்ஸ் உயிருடன் இருந்தபோது நன்கு கண்டு பழகியவர். அத்துடன் மட்டுமல்ல—இருவரும் நெருங்கிய நண்பர்களுமாவர். மானேஜர் முகம்மூடிய ஜேம்ஸ் உருவைக்காணவே முதலில் நடுங்கினரேனும், பிறகு துணிந்து தன் மனதில் ஒரு தைரியத்தை எழுப்பிக்கொண்டு திடீரென்று ஜேம்ஸ் பேயைக் கட்டிக்கொண்டார். அதுவோ அவரை அறைந்து கொல்வதற்குப் பதிலாக ஆவலுடனும் தழுவிக் கொண்டது. மறு நிமிஷத்தில் பேயின் முகமூடி பிடுங்கி எறியப்படவே உண்மையான ஜேம்ஸ் எதிரில் நிற்பதை இருவரும் கண்டனர். காண்டவன் உடனே தன் எஜமானனது பாதங்களில் விழுந்து வணங்கினுன். ஜேம்ஸ் இறக்கவில்லை யென்றும், பேயின் உருவில் ஜேம்ஸ் தோன்றிக் காண்டவனின் அஞ்ஞானத்தைத் தொலைக்கப் பாடுபட்டாரென்றும் தெளிவாயிற்று.

ஜேம்ஸ் மானேஜருக்குச் சொன்னதாவது :—அன்றிரவு என்னைத் தன் மூடபக்தியால் காண்டவன் தூக்கி யந்திர தெய்வத்திற்குப் பலிகொடுக்கப்போனுன். நான் தப்பி ஓடிவிட்டேன். அதேசமயம் ஒரு திருடர் கூட்டத்தார் தங்களுக்குள் இறந்த ஒருவனின் பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு வந்து நான் மறைந்து நிற்கும் இடத்தில் வைத்தனர். அவன் உருவம் நல்ல சிவப்பு. அதன்பின் ஒரு நிமிஷம் பொறுத்துக் காண்டவன் அங்கு என்னைத் தேடிவந்து அங்கிருந்த சவத்தையே நான் என்று எண்ணித் தூக்கிச் சென்று யந்திர தெய்வத்துக்குப் பலிதந்து விட்டான். சவத்தை வைத்துச் சென்ற கள்வர் திரும்பவந்து சவத்தைக் காணுமல் தேடினர். உடனே நான் அவர்களில் இருவரைப் பிடித்துக் கொள்ளவும் மற்றவர்கள் என் ஐரோப்பிய உருவைக் கண்டு என்னிடம் துப்பாக்கி யிருக்குமென்று நினைத்துப் பயந்து ஓடி விட்டனர். மறு நிமிஷமே போலீஸார் வர அவர்களிடம் ஒப்புவித்தேன். அவர்கள் ஒரு வீட்டில் கொள்ளை யிட்டதாயும் போலீஸாரால் சுடப்பட்டு இறந்த ஒருவனைத் தூக்கிக்கொண்டு ஓடியதாயும் தெரிந்தது. பிறகு ரகசியமாய் என் மாளிகைக்குச் சென்று என் மனைவியிடம் யாவும் கூறிக் காண்டவனின் மூடபக்தியைத் தெளிவிக்கவேண்டு மென்றேன். காண்ட

வனின் மீது என் மனைவிக்கு அதிக விஸ்வாசம். எதும் தெரியாத பேதை என்பதில் எனக்கும் அவனிடம் அதிக இரக்கம் உண்டு. மறுநாள் பத்திரிகைகளில் என் தொப்பி யந்திரத்தில் சிக்கி நான் இறந்துவிட்டதாக வெளிவரவே திடுக்கிட்டேன். காண்டவனின் மூடபக்தியை விலக்காவிடில் அவனால் என்றைக்காவது என் உயிர் நீங்கும் என்று தெரிந்துகொண்டேன். மனித உருவுடன் அவனுக்குக் கல்வி கற்பிப்பதிலும், பேயின் உருவில் கற்பித்தால்—பேயின் பயம் உலகிலேயே பெரிய பயமாதலால்—அவன் பயத்துடன் கல்வி கற்றுக்கொண்டு விடுவானென்று எண்ணி, நான் உயிருடன் இருப்பதை வெளியிடாமல் மறைத்துவிட்டேன். ஆயினும் இரவில் காண்டவன் என்னைச் செய்ததுபோல் வேறு எவரையும் செய்யாதிருக்க வேண்டி அங்கு சென்று முகமூடியுடன் மறைந்திருந்தேன். காண்டவன் மானேஜரைப் பலிகொடுக்க முயன்றபோது அவன் மூக்கில் அறைந்து தடுத்து மானேஜரான உங்களைத் தப்பிப் போகவைத்தேன். பிறகு மறு தினமுதல் பேயின் உருவில் காண்டவன் முன்பு தோன்றி அவனுக்கு யாவும் கற்பித்து இந்த இரண்டரை வருடமாகப் பாடுபட்டு 15-வருஷங்களில் வரவேண்டிய வித்தைகள் அனைத்தையும் இந்த சொற்பகாலத்தில் சித்திக்கும் படிசெய்து அவனை எனக்குச் சமமானவனாக்கி விட்டேன். இப்போது அவனுடைய யந்திரதேவதைப் பைத்தியமும் ஒழிந்து நல்ல மின்சார நிபுணனாகவும் ஆகிவிட்டான். எனக்குப் பிரியமாய் குழந்தைபோல் என் வீட்டிலிருந்த அவன் ஒரு மூடனாய்க் கொலைகாரனாய் ஏற்படுவதைக் காண என் மனம் ஒப்பாமையால் இவ்வளவு கஷ்டத்தையும் ஏற்றுக் கொண்டேன். என்னைப் போலவே அரசாங்கத்தினரும் கல்வியில்லாத பலவித மூட நம்பிக்கைகள் மிகுந்த தங்கள் குடிகளை வித்தை பயிலச் செய்வித்து அறிவின் குழந்தைகள் ஆக்குவாராயின் நாட்டில் அராஜகம் ஏது?—இராஜத்துரோகம் ஏது?—வகுப்புப் பிரிவினைகள் ஏது? கலகங்கள், மதச் சண்டைகள் ஏது?—எல்லாம் திருந்திவிடுமே என்றார் ஜேம்ஸ்.

மானேஜர் ஜேம்ஸின் கதையைக் கேட்டு ஆச்சரியப் பட்டார். காண்டவன் தனக்காகப் பாடுபட்ட தலைவரை மறுபடியும் வணங்கித் தான் அவரைப் பலிகொடுக்க முயன்ற மூடத்தனத்துக்குத் துக்கித்து மன்னிப்பு வேண்டினான். ஜேம்ஸும் அன்புடன் மன்னித்தார். மறுநாள் பத்திரிகைகளிலெல்லாம்—"பிழைத்தெழுந்த ஜேம்ஸ்"ஸைப்பற்றி விஸ்தாரமாக எழுதப்பட்டன. காண்டவன் இப்பொழுது ஜேம்ஸுக்கு அஸிஸ்டெண்டு மானேஜராய் இருநூறு ரூபாய் சம்பளத்தில் இருந்து வருகிறான். அடுத்த மாதம் அவனுக்குக் கலியாண மென்றும் அறிகிறோம். இந்த சுப செய்தி யாவருக்கும் களிப்பூட்டுமன்றோ? ஜேம்ஸ் வாழ்க.

எஸ். ஜி. இராமாநுஜன்.

---

## சாமியாரின் வஞ்சல ஆருடம்!

அந்த சாமியாரிடம் 'குறி' கேட்காதவரையில் உனக்குக் கஷ்ட காலம் இல்லை யென நம்பு. தெரிந்து படும் கஷ்டங்கள் போதாதா? இனி மறைந்துள்ள கஷ்டங்களைக் கூட முன்னறிந்து நெஞ்சு வேகவேண்டுமோ? ஈசன் விட்ட வழியென்று அவரை நம்பிய பாதையில் நட. நலமே பெறுவாய் அதனால்.

# சென்ற மாதம்

சென்ற நவம்பர் மாதம் 8-ம் தேதியன்று சென்னை தேர்தலின் மாகாண முற்றும் ஒரு ஆரவாரம் பெரிய பண்டிகை நாள் போலிருந்தது. தேர்தலின் கிளர்ச்சியைப் பாமர ஜனங்கள் முதற்கொண்டு அறிந்திருந்தனர். நம் நாட்டில் ஏகாதசி, அமாவாசை முதலிய விரத தினங்கள் எவ்விதம் அதன் கொள்கை தெரியாமல் பெரும்பான்மையும் அநுஷ்டிக்கப்படுகின்றனவோ, அதுபோல இந்தத் தேர்தலையும் அதன் தாத்பரிய முணராமல் ஐச்வரியவந்தர்களின் குதிரைப் பந்தயமாகவே பலர் நினைத்து அதன் முடிவை எதிர் நோக்குவ தாயினர். தேர்தலின் கருத்து இன்னதென்று உணராதவர்கள் "பணம் வந்தால் தான் ஓட்டு" என்றும் தீர்மானித்து விட்டனர். "பணம் வரவில்லை" என்று ஓட் கொடுக்கப் போகாதிருந்து விட்டவர் வெகு பேர்! "எவ்வளவுக்குப் பணம் செலவழித்திருக்கிறோமோ அவ்வளவுக்கும் நமக்கு வெற்றி நிச்சயம்" என்று அபேக்ஷகர்களிற் சிலர் எண்ணுவதாயினர். வேறு சிலரோ தங்கள் ஆஸ்தியில் பாதியைச் செலவிட்டேனும் 'தலை தூக்குவது' என்று முடிவு கட்டினர். ஓட் சேகரிப்பதற்காகப் பை பையாகப் பண மூட்டை பெற்றவர்கள் சில ரூபாய்களைச் செலவழித்துவிட்டுப் பாக்கியைத் தங்களுடையதென் றெண்ணிப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டனர்! சென்ற முறை அபேக்ஷகர்களாக வந்து "நஷ்டப்பட்டவர்கள்" இம்முறை நல்ல யோசனையுடன் தூர ஒதுங்கிக் கொண்டனர். இவ்வளவு ஆரவாரங்களின் மத்தியில் காங்கிரஸுக்கே வெற்றி கிடைத்து விட்டது நாட்டிற்கு நல்ல பெருமைதான். காங்கிரஸ் கக்ஷி நாட்டிற்கு நலம் செய்யும் என்பது வெகு காலமாய் ஊன்றிப் பரவிய அபிப்பிராயமாகும். அதற்கேற்ப அது வெற்றி பெற்றதும் சகஜம் தான். காங்கிரஸ் வாழ்க!

* * *

"ஜஸ்டிஸ்" கக்ஷியைப் பிராமணரல்லாதார் காங்கிரஸ் எதிர்த்த கக்ஷி யென்று வெற்றி கிடைத்த போற்றித் துதிப்பதேன்? தற்கு நமக்குப் பாக்கியம் கிடைக்காமற் போனது பெரிய துரதிர்ஷ்டம்! சிறு பான்மையில் அது "அல்லாதார்க்கு" நன்மை செய்திருப்பது போல் காண்பித்து நடந்து வந்திருக்கிறது. ஆனால் பெரும்பான்மையும் அந்தக் கக்ஷி ஜனங்களின் விருப்பத்திற்கு முற்றும் விரோதமாக ஸர்க்கார் சார்பிலே சங்கீதம் பாடும் பஜனை கோஷ்டியாக மாறிவிட்டதில்தான் அதனைச் சரியான பொது ஜனப் பிரதிநிதித்துவக் கக்ஷியென்று சொல்ல முடியாமற் போய் விட்டது. இந்த விஷப்பூச்சி அதில் நுழைந்து கொண்டதால் தான் "அல்லாதாரில்" வெகு பேர் அதை ஆதரிக்கக் கூடாமல் பின்னடைய நேர்ந்தது. காங்கிரஸ் கக்ஷி பிராமணக் கக்ஷி யென்று பழிக்கப்பட்டதாயினும், காங்கிரஸுக்கு நெடுங்காலமாக இருந்துவரும் நன்மதிப்பைப் போற்றாது போவதற்கு "அல்லாதாரின்" மனசாக்ஷி ஒரு சிறிதும் ஒப்பவேயில்லை. அதனாலும் "அல்லாதாரின்" ஓட்டுகள் காங்கிரஸுக்கே அதிகம் கிடைப்பதாகி வெற்றியும் அதற்கே சித்தித்தது. இதுதான் நடந்த உண்மை.

***

**அபிப்பிராய பேதத்திற்காகப் பகைத்தல்**

விவாக 'முடிச்சு' விழுவதற்கு முன் வரையில் எவ்வளவோ அபிப்பிராய பேதங்கள்! எத்தனையோ குட்டிக் கலகங்கள்! மாங்கல்யதாரணம் ஆனதும் எல்லாம் மறைந்து விடுகின்றன. விவாக தம்பதிகளை அனைவரும் மனஸ்பூர்வமாய் ஆசீர்வதிக்க முன்வருகின்றனர். அதுபோல் ராஜீயவிஷயங்களில் பிதாவுக்கும் குமாரனுக்கும் அபிப்பிராய பேதங்கள் நேர்ந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு கக்ஷியைச் சேர்ந்திருக்கலாம். ஆனால் அந்தக் கக்ஷிக்காகப் பிதா-புத்திர வாஞ்சையையும் எதிர்த்துக் கொள்ளுதல் நியாயமாகுமா? அவ்விதமே, தங்களின் ராஜீய அபிப்பிராயத்துக்கு மற்றவர் இணங்கி வராவிடில் அதற்காக அவரிடம் கொண்டிருக்கும் அந்நியோன்னியத்தையும் நட்பையும் விட்டுவிடுதலும் பகைப்பதும் நேர்முறை யாகாது. பார்லிமெண்டு சபைக்குள் நுழைந்ததும் எத்தனையோ வியவகாரங்கள்! அபிப்பிராய பேதங்கள்! அதை விட்டு வெளியில் வந்ததும் எவ்வளவோ பிரியமுள்ள நண்பர்களாக மாறிவிடுகிறார்கள். இதை நம்மவர்களும் பின்பற்ற வேண்டும். ஒருவரது அபிப்பிராயத்தில் ஒரு பகுதியை மட்டும் ஆதரிக்க முடிகிறது. மற்ற பகுதிகளையோ சரியென்று கொள்ள மனசாக்ஷி ஒப்பவில்லை, அவ்விதம் ஒப்பாமைக்காக அவரைத் தமது நட்புத் தன்மையிலிருந்தும் தூர ஒதுக்கிவிடுதலும் பகைப்பதும் நியாயமாகாது. கத்திரிக்கோல் போல் இரு பகுதியும் பிரிக்க முடியாமல் ஒன்றுபடுத்தப்பட்டுள்ள ஸதிபதிகளுக்குள்ளாகவே எவ்வளவோ அபிப்பிராய பேதங்கள் இருப்பதையும் காண்கின்றோமன்றோ? எனவே, அபிப்பிராய பேதத்தைப் பொருட்செய்யாமல் பரஸ்பரமுள்ள அந்நியோன்னிய பாவத்தையும் ஆதரித்துச் செல்வதே சிறப்பாம்.

---

## நீள நினைக்கும் நினைவில்தான் அன்பின் புஷ்பிப்பு

ஈசுவர சிருஷ்டியின் அற்புதங்களை ஒரு மணிநேரம் ஆழ்ந்து ஆலோசித்திடு. அது கடவுளை நோக்கி நூறாண்டு ஜெபிப்பதிலும் மேலானது. ஒருவரை நாம் நினையாவிடினும், அவர் நமக்குச் செய்த உபகாரங்களை நீள நினைப்பின் அதுவே அவரை நினைப்பதைவிட ஆயிரம் பங்கு மேல். அதுவே அன்பின் ஊற்றுப் பெருக்குக்கு வெகு சுலபமான பாதை.

# சிதம்பர ஆருத்திரா தரிசனம்

“மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப் போகின்றதையே” என்றார் நந்தனர். அம் மாதத்தில் சிதம்பரத்தில் நடந்தேறும் ஆருத்திரா தரிசனம் மிக்க வைபவமுள்ளது. அன்று விடிய ஐந்து நாழிகைக்கே ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கும் சிவகாமி யம்மைக்கும் அபிஷேகம் செய்ய ஆரம்பிப்பர். ஆயிரமாயிரமான பாற்குடங்கள், தேன், விபூதி, சுத்தோதகம், கரும்பு ரஸம், தயிர்--முதலியவற்றால் பகவானுக்குத் திவ்யமாக அபிஷேகம் செய்விப்பதை இலக்ஷக்கணக்கான ஜனங்கள் தரிசித்து ஆநந்த மெய்துவர். மனித ஜென்மமெடுத்தவன் இப்பரத கண்டத்திலுள்ள ஸகல ஆலயங்களுக்குச் சென்றிருந்தாலும், எல்லா தீர்த்தங்களில் ஸ்நானம் செய்திருந்தாலும் நான்கு வேதங்களை அத்தியயனம் செய்திருந்தாலும் பிரதி வருஷமும் ஆருத்திரா தரிசனத்தன்று ஸ்ரீ நடராஜமூர்த்தியைத் தரிசியா விட்டால் அவன் ஜன்மம் வியர்த்தமென்றே நாம் சொல்லலாம். மகா பாதகனுயிருந்து நிரீசுவரவாதம் செய்தாலும் ஆருத்திரா தரிசனத்தன்று ஸ்ரீ சிதம்பரேசனை ஒரு நிமிஷ நேரமாவது தரிசித்தால் அவன் மனதில் பக்தி நிலேத்து ஊன்றிவிடும். ஸ்வாமியின் முன்னழகைப் பார்ப்பவர்கள் அதையே பார்த்துக்கொண் டிருப்பார்கள். பின்னழகைப் பார்ப்பவர்கள் அதிலேயே சித்தத்தைப் பதிப்பிப்பார்கள்.

***

சித்தத்தை ஒரே நிலையில் நிறுத்தவேண்டி யோகிகள் மலைகளிலும் காடுகளிலும் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். ஐயோ பாவம்! அவர்கள் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியைக் கண்டால் அப்புறம் யோகாப்பியாஸம் செய்யவேண்டிய அவசியமே யிராது. தாண்டவமூர்த்தி ஆயிரக்கால் மண்டபத்தி லிருந்து இறங்கி வரும்போது அவர் திருமேனியிலுள்ள ஸர்வாபரணங்களும் தகதகவென ஜ்வலித்து ஜிலீர் ஜிலீரென்று பிரபையை வீசி தேனை மொய்த்துக்கொண் டிருக்கும் ஈக்களைப்போல் சுற்றிலும் நின்றுகொண்டுள்ள பக்தர்களைப் பரவசமாக்கிவிடும். பிரம்மாநந்த மெப்படி யிருக்குமென்று ஒரு வித்தியார்த்தி கேட்டதற்கு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்—‘அதைச் சொல்லமுடியாது, அநுபோகத்தில்தான் தெரிந்துகொள்ள வேண்டும்’—என்றாராம். அந்த வித்யார்த்தி சிதம்பரத்தில் ஆருத்திரை யன்று ஸ்ரீ நடராஜனைத் தரிசித்தால் பிரம்மாநந்தம் இன்னமாதிரி யென்பதைச் சுலபமாக அறிந்து கொள்ளலாம். பகிர்முகனு யிருப்பவன் கர்மங்களை அநுஷ்டித்துக் கஷ்டப்படுகிறான். அந்தர்முகனு யிருப்பவன் யோகாப்பியாஸம் செய்து திவ்ய ஞானத்தை யடைகிறான். யாதொரு கஷ்டமுமின்றி நடராஜ பக்தர்கள் அவருடைய தரிசனத்தால் முக்தியை யடைகின்றனர், ஆநந்த மெய்துகின்றனர். நம்பிக்கை யில்லாதவர்களுக்கு எதுவுமில்லை. எல்லாம் மனம் பற்றும் வகையையும் அதன் பெருமையையும் பொருத்தது.

***

நடராஜன் என்றால் நடன சபைக்கு அதிபதியென்று அருத்தம். இவ்வுலகமே நடனமாடும் ஸ்தலம். நாடகத்தில் பற்பல வேஷங்கள் வரு

கின்றன. அதுபோல் இவ்வுலகத்தில் பற்பல ஜீவராசிகள் தோன்றி மறைந்து போகின்றன. இப்படியாக இளைஞர், விருத்தர், ஆண், பெண், மனுஷ்யன், மிருகம், புல், பூண்டு முதலிய பொம்மைகள் உலகமாகிய நாடக ஸ்தலத்தில் தோன்றி ஆடுவதெல்லாம் ஆத்மா அல்லது கடவுளின் சக்தியாலேயே யன்றி வேறல்ல. பொருள்களை யாட்டினால் அது ஆடாமலிருக்குமா? வீணையை மீட்டினால் அது பாடாமலிருக்குமா? அதுபோல் நம்மை ஆட்டி வைக்கும் பரமாத்மாவுக்கே நடராஜன் என்று பெயர். அந்தராத்மா வொன்றில்லையானால் இவ்வுலகமெல்லாம் ஜடமாயன்றோ விருக்கும். மனுஷ்யனுடைய மனதுக்கு ஆத்மாவே உண்மையான உபாத்தியாயர். ஆதலின் நடராஜ மூர்த்தியே நல்ல குரு. உலகத்தில் இரண்டு விதமான ஆசாரியர்களுண்டு. பெயருக்கு ஆசாரியர் ஒருவர். உண்மையான ஆசாரியர் ஒருவர். இவரே சிஷ்யனுக்கு எல்லாவற்றையும் கற்பித்து அவனைத் தன் வழியில் நடத்துகிறார். இப்படிச் செய்பவரைத்தான் நாம் குருவென்கிறோம். ஆனால் உண்மையாகவே நாம் கற்றுக்கொண்ட விஷயங்களெல்லாம் நமக்குள்ளிருந்தே வந்தன. செடிகள் பூமியிலிருந்து தாமே உண்டாகின்றன. நாம் கொட்டும் தண்ணீரும், போடும் எருக்களும் அவைகள் வளர்வதற்கு அநுகூலமே யன்றி வேறல்ல. இம்மாதிரியே நமக்குள்ளிருக்கும் மனம் தானே விருத்தியாகவேண்டும். அப்படியானால் நடராஜனே அவரை நம்பியவர்களுக்கு ரூபத்தோடுகூடிய உண்மையான குரு.

குருவின் முக்கியமான கடமை யென்ன? பிறருக்குப் போதிப்பதைப் போலத் தான் நடப்பது. அதாவது தான் நடந்து காட்டுவதால் பிறருக்குத் தான் போதிப்பதை விளக்குவது. நடராஜ மூர்த்தியின் வலது கையொன்றில் உடுக்கு என்ற ஒரு வாத்திய மிருக்கிறதே அதென்ன? இவ்வுலகத்துக்கான காரணத்தைக் குரு கொண்டிருக்கிறாரென்பதைக் குறிப்பிடுவதற்காம். சப்தத்தினாலே இவ்வுலகம் நிலைபெற்றது என்பது சாஸ்திரம். சப்தத்தையுண்டாக்கும் உடுக்கையை நடராஜர் தம் கையில் வைத்திருப்பதால், அவர் தம்முடைய இஷ்டப்படி உலகத்தை எப்படி வேண்டுமானாலும் ஆட்டலாமென்றேற்படுகிறது. ஞானிகளுக்கு, அவர்கள் வேண்டுமானால் இவ்வுலக மிருக்கும்; வேண்டாவிட்டால் உலகமில்லை. நடராஜமூர்த்தியின் ஒரு பக்கத்திலுள்ள மான் மனதைக் குறிக்கிறது. ஏனெனில், மானைப்போல் மனம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தாவுகிறதால், மானைப்போல் தாவும் மனதையுடைய மனிதர்களுக்கு ஆத்மாவின் தரிசனம் அகப்படுவ தருமை. நடராஜர் தாம் கொன்ற புலியின் தோலைத் தரித்துக்கொண்டிருக்கிறார். அகங்காரம் தான் அப்புலி. அகங்கார மென்னும் புலி யாரைக் கண்டாலும் எதிர்க்கிறது. அதைக் கொல்லுவதற்கு நடராஜ மூர்த்தியே தகுந்தவர். நடராஜன் தம் சிரசில் கங்கையைத் தரித்துக்கொண் டிருக்கிறார். கங்கை தான் சித்சக்தி. அதுதான் ஞானம். வெகு குளிர்ச்சி பொருந்தியது. அவர் சிரசிலிருக்கும் சந்திரன் சீதளமாயும் பிரகாஸமாயு மிருப்பதால் ஆத்மாவின் பிரகாஸத்தைக் காட்டுகிறது. ஸ்ரீ நடராஜமூர்த்தி ஒரு காலினடியில் முயலைப் போட்டு மிருக்கிறார். அந்த முயல்தான் மகா மாயை. இந்த மாயையே பிறப்புக்கும் இறப்புக்கும் காரணம்.

இன்னொரு பாதத்தை மேலே தூக்கிக் கொண்டிருப்பது துரியத்தின் நிலைமையை யுணர்த்துகிறது. இது ஜாக்கிர ஸ்வப்பன ஸுஷுப்தியாகிய

மூன்று அவஸ்தைகளையும் கடந்த அப்பாலுள்ள ஸ்திதி. இதற்குப் பின்னால் மனஸு, மாயை, உலகம் இவைகள் கிடக்கின்றன. இன்னொரு வலது கை ஸமாதானத்தைக் காட்டுகிறது. அதாவது ஞானி அநுபவிக்கும் மௌன மாகிய ஆநந்தத்தைக் குறிக்கிறது. நடராஜனது இடதுகை யொன்றில் இருக்கும் மழு, அதாவது நெருப்பு, அவர் ஆத்மாவின் ஸ்வ ரூபமாகிய ஜோதியை சிஷ்யர்களுக்கு நேரில் காட்டி யுபதேசிப்பதை யுணர்த்துகிறது. இவ்வாறு நடராஜன் நடனமாடும் ஸ்தலம் தில்லைவனமாகும். மனுஷ்ய சரீரத்தையும் இப் பேருலகத்தையும் வனத்துக்கு உவமை இடுவதுண்டு. வனத்தில் பற்பல மரங்களும் செடிகளும் விலங்குகளு மிருப்பதுபோல் மனுஷ்யனுடைய சரீரத்திலும் அநேக வஸ்துக்க ளிருக்கின்றன. கடைசியில் இம் மானிட தேகம் முடிவு பெறும் ஸ்தலமாகிய ஸ்மசானத்தில் ஆசாபாசங்களும் நாம ரூபங்களும் உலகமாகிய மாயையின் தோற்றமும் அழிந்து பஸ்மீகரமாகின்றன. மேற்கூறிய நடராஜ மூர்த்தியின் சில லக்ஷணங்களால் நாம் அறிந்து கொண்ட விஷயங்களாவன :—'நடராஜன்' என்னும் குரு மாயைத் தொலைத்து, உலகத்தை நம்முள் அடக்கி, நாம் அதில் அகப்பட்டு விழிக்காமல், சலன மனதைப் பின்னால் தொலைத்து, அகங்காரத்தை யழித்து, எவ்வகையான ஆசையும் பாசமுமின்றி ஆத்மாவின் சொந்த ஸ்தானமாகிய சிதாகாசத்தை அடைந்து, பிரம்மாநந்தத்தை யனுபவிக்கும் படி நமக்குப் போதிக்கிறார். இத்தகைய வைபவமுள்ள நடராஜ விக்கிரகத்தை சாமான்யமாய் நினைக்கும் மாந்தர்கள் உளராயின், அவர்களின் சித்த பக்குவ மின்மைக்காக நாம் இரங்கக் கடவோம். இத்தகைய மூர்த்தியையும் அம் மூர்த்தி எழுந்தருளியுள்ள சிதம்பரத்தையும் ஆருத்திரா தரிசனத்தன்று தரிசிப்பது மிக்க விசேஷமாகும்.

---

## விகல்ப நெஞ்சின் விபரீதம்.

அவனுக்கு ஜாதகம் போதாதென்றால் உருக்கமுள்ள நெஞ்சுக்கு அது ஒரு பேரிடி! பற்றற்ற நெஞ்சுக்கோ அதைப்பற்றி ஒரு கவலையுமில்லை. அவரவர் மனம்போல் அதது. தன்னைச் சேர்ந்தவர்களுக்கு வியாதி வந்தால் அப்போது நடக்கும் உபசாரங்கள் வேறே! பிறருக்கு நோய் வரினோ ஒன்றுமில்லாததற்கு இவ்வளவு ஆரவாரமா என்ற பழிப்பு!

பாரிஸ் நகரில் பணம் அதிகரிக்கும் வரையில் ஸம்பாதித்துச் செலவழிக்க வழி தெரியாமல் விழித்த ஒரு மனிதன் ஒரு சீசா நிறையக் கோதுமையை நிறைத்தால் எத்தனை எடையிருக்கு மென்பதைச் சரியாய்ச் சொல்வோர்க்கு 15,000-ரூபாய் வெகுமதி கிடைக்குமென்று தண்டோரா போட்டான். இப்பொருளை யடையவேண்டி அனேகர் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். 13-லக்ஷ ஜனங்கள் எழுதி யனுப்பின கணக்கை ஒரு ஸபையில் நிறுத்துப் பார்க்கையில் அதில் 39,588-கோதுமைகளிருந்தன. ஒரு கம்மாளன் இக்கணக்கைத் தெரிவித்ததால் அவன் அப்பொருளை வெகுமதியா யடைந்தான்.

# பெரியாரின் மொழிகள்.

(410-பக்கத் தொடர்ச்சி.)

26. An excess of idealism may hamper progress, but lack of it causes the soul to perish.

*உயர்ந்த லக்ஷ்யங்களை அமிதமாகக் கொள்வது வளர்ச்சிக்குத் தடையாகலாம்; ஆனால் அவைகள் இல்லாது போயின் ஆத்மாவை நசிக்கச் செய்கின்றன.*

27. He who builds a church to God, not to fame,
Will not mark the marble with his name. *A. Pope.*

*புகழுக்கின்றி ஈசனுக்குக் கோயில் கட்டுபவன் தன் பெயரைக் கல்லில் செதுக்கமாட்டான்.* போப்.

28. 'Tis the eternal law
That first in beauty should be first in might. *Keats.*

*அழகிற் சிறந்தவரே ஆண்மையிலும் சிறந்தவராக வேண்டு மென்பது தெய்வீகமான சட்டம்* கீட்ஸ்.

29. To work we must live, to live we must work, thus we see that work and life are inseperably connected. *R. Tagore.*

*வாழ்வதற்கு நாம் வேலை செய்யவேண்டும். வேலை செய்யவோ உயிர் வாழ்வதவசியம். ஆதலின் வாழ்க்கையும் கன்மமும் இணை பிரியாது சம்பந்த முள்ளவை என்பது விளங்குகிறது.* டாகூர்.

30. Paradise lies at the feet of thy mother. *Koran.*

*உன தன்னையின் பாத கமலங்களிலேயே மோக்ஷம் இருக்கிறது.*
*கொரான்.*

31. It is easier for a String of camels to pass through a needle's eye than for a rich man to obtain Heaven. *Bible.*

*தனவந்தர் மோக்ஷமடைவதை விட, ஊசியின் காது வழியே ஒட்டக வரிசை புகுந்து வெளி வருவது சுலபமான காரியம்* பைபிள்.

32. Man's history is shaped according to the difficulties it encounters. *R. Tagore.*

*மனித சரித்திரமானது அதற்கு நேரிடும் கஷ்டங்களுக்குத் தக்கபடி உருவமைக்கப் பெறுகிறது* டாகூர்.

33. Histories are but the biographies of great men.
*Carlyle.*

*தேச சரித்திரங்கள் மகான்களின் ஜீவிய நூல்களே* கார்லைல்.

34. That one man should die ignorant, who hath capacity for knowledge, this I call a tragedy. *Carlyle.*

*அறிவை யடையும் வன்மைபெற்றவ னொருவன் அதை யடையாது இறப்பானாயின், இதுவே ஒரு பெரும் துக்க சம்பவமாம்* கார்லைல்.

35. Of all the forces that have worked and are still working to mould the destinies of the human race, nothing is so potent as the manifestation of which we call religion.
*Swami Vivekananda.*

மனித ஜாதியின் போக்கை நிர்ணயிக்க வேலை செய்ததும், செய்து வருவதுமான சக்திகளுள் மதம் என்றதைப்போல் வன்மை பெற்றது எதுவுமில்லை. விவேகாநந்தர்.

36. Religion makes us always better,
Love sometimes, power never.

மதம் நம்மை எப்பொழுதும் மேன்மை யடையச் செய்கிறது. அன்பு சிற்சில சமயங்களில் அவ்விதம் செய்யும். ஆண்மையோ ஒரு பொழுதும் அங்ஙனம் செய்யாது.

37. Self-reverence, self-knowledge, self-control,
These three alone Lead life to sovereign power.
*Tennyson.*

தன் மதிப்பு, தன்னறிவு, தன்னடக்கம் இவை மூன்றுமே வாழ்க்கையை அதன் உன்னத நிலைக்கு இட்டுச் செல்கின்றன. டென்னிஸன்.

38. Sweet are the uses of Adversity
Which like the toad ugly and venemous
Wears yet a precious jewel. *Shakespeare.*

துன்பத்தினின்றும் நிகழும் பயன்கள் இன்பமானவை. துன்பம் விஷமுள்ளதும் அசங்கியமானதுமான சர்ப்பத்தை யொத்து ஒரு மதிப்புள்ள மாணிக்கத்தைப் பெற்றிருக்கிறது. ஷேக்ஸ்பியர்.

39. Man has structural relation with three things, God, world, and soul. *Kant.*

மனிதனுக்கு கடவுள், உலகம், ஆத்மா, இம்மூன்று வஸ்துக்களுடனும் இயற்கையாலான சம்பந்தம் உண்டு. கேன்ட்.

40. Man is a pendulum betwixt a tear and a smile. *Byron.*

மனிதன் புன்சிரிப்புக்கும் துக்கக் கண்ணீருக்கும் மத்தியில் ஊசலாடும் வஸ்துவே. பைரன்.

41. We are eternally in contact with problems. Man is an obscure being, he knows little of the world and of himself least of all. *Goethe.*

நாம் ஸதாகாலமும் பெரும் பிரச்னைகளில் ஆழ்ந்திருக்கிறோம். மனிதன் ஒரு முக்கிய மில்லாத பிராணி. உலகைப்பற்றி அவன் சிறிதே யறிகிறான். தன்னைப் பற்றியோ இன்னும் சிறிதளவே அவனுக்குத் தெரியும். கீதே.

(தொடரும்.)

R. இராமகிருஷ்ணன் B.A.,

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(377-ம் பக்கத் தொடர்ச்சி.)

27. பெண்களுக்குப் பெற்றோரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் மூப்பில்லை.

28. டில்லிக்கி பாச்சா தல்லிக்கு பிட்டா.

*இவ்விரு பழமொழிகளும் ஒரே பொருளைக்கொள்வன ; உள்ளத்தி லுள்ள அன்பை வெகு தெளிவாய் வெளியிடுவனவுமாகும். எல்லாம் தங்க ளுடைய தென்று நினைத்து இளமை முதலாய் வீட்டிலுள்ள எல்லாப் பண்டங்களிடமும் பழகி யாருடனும் மனது கலந்து அன்புருவாய் நிற்கும் பெண் குழந்தைகள் கடைசியில் அனைத்தையும் விட்டுவிட்டுக் கணவனின் இல்லம் சேருகிறார்க ளெனினும், தங்களின் தாய்வீட்டுப் பாசத்தைத் தமது ஜீவியத்தில் ஒருபொழுதேனும் மறவார்கள். தாய் வீடு என்றால் தக்ஷணமே துள்ளிக் குதித்துப் பரவசப்படும் அன்பு பெண்மக்களுக்கு அவர்களின் பிறப்புடனேயே பிறந்தது. அன்றியும் பிறந்த நாள் முதல் கால முற்றும் பிறந்த இடத்திலேயே வாஸம்செய்யும் ஆண் மக்களுக்கு அத்தாய் வீட்டின் உணர்ச்சி அவ்வளவாய் ஒரு அருமையாக அபூர்வமாக மனதிற் சென்று தாக்காது. அவ்விடத்திலேயே சதா வசித்துப் பழகிவிடு கிற தோஷம் அந்த உணர்ச்சித் தன்மையைப் பூரணமாய் அறியாதபடி தடுத்துவிடுகிறது. பெண்கள் விஷயமோ அவ்வாறன்று. தாய் வீட்டை விட்டுப் பிரிதலான "பிரிவு" என்பதொன்று அவர்களின் வாழ்க்கையி னிடையே நேர்வதால், அப்பிரிவு காரணமாய்த் தாய் வீட்டைப் பூலோக ஸ்வர்க்கம்போல் அவர்களை நினைத்துக்கொள்ளச் செய்து அன்புருவாக்கு கின்றது. இதற்கு இணங்கப் பெற்றோர்களும் தங்களை விட்டுப் பிரிந்து கணவனகம் சென்ற தங்களின் புத்திரிகா ரத்நங்களின்மீது இரவும் பக லும் அதே சிந்தையாய் அவர்களிடமே தமது அன்பை யெல்லாம் செலுத் தியவர்களாய் இருக்கின்றனர். தமது குமாரனுக்கு எதுவும் செய்யாமற் போனாலும், தங்கள் வயிற்றில் பிறந்த பெண்ணுக்கு எல்லாம் செய்வித்து அனுப்புகிறார்கள். தங்கள் பெண் க்ஷேமமாய் வாழவேண்டுமே யென்று கால முழுதும் கவலைப்பட்டுக் கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள். ஆண் பிள்ளை கள் பெற்றோர்களை மறப்பது கேட்டதுண்டு, பார்த்ததுண்டு. பெண் மக்கள் தங்களின் தாய் தந்தையரை மறந்ததாக எந்தக் கட்டுக் கதையிற் கூடக் கிடையாது. இத்தனை அன்பும் அருமையுமா யிருக்கிறவகையில் அப்பெண் குழந்தைகள் பிறகு வயோதிகமடைந்தாலும், பெற்றோர்களுக்கு அவர்கள் சிறு குழந்தைகளாகவே தோற்றிக் குழந்தைக் காலத்தில் வைத்த அன்பையே இப்போதும் வைப்பார்கள். பெண்களுக்கு மூப்பு என்பது கணவன் வீட்டில்தான். ஏனெனில், அப்பெண்களின் யௌவன ராசியிற் சிக்கியே அவர்களை ஆடவர்கள் மணந்ததாகும். பின் யௌவனம் தளர்ந்*

திடில் வேறொரு நங்கையிடத்துச் சித்தம் செல்வதும், அப்பொழுது பெண்ணின் மூப்புக் காரணமாக அவள் சொந்தக் கணவனால் அலக்ஷியிக்கப்படுதலும் சாதாரண சம்பவம். இவ்விதமான ஸ்வபாவம் பெண்மக்களுக்குத் தங்களின் தாய் வீட்டில் இல்லை. மூப்பு வந்த காலத்தும் அதிர்ஷ்ட வசமாய்ப் பெற்றோர்கள் ஜீவித்திருந்தால் அவர்களால் குழந்தைக்குச் சமானமாகவே பாராட்டப் படுவார்களே யன்றி 'மூப்பு' என்று அலக்ஷியம் செய்யப்பட மாட்டார்கள். அவ்விதமே தமது உடன்பிறந்தோரிடமும் மூப்பு என்று அவமதிக்கப் படார்கள். எவ்வளவு தான் கிழவியானாலும் ஒருவனுக்கு அவள் அன்புள்ள ஆசையுள்ள தமக்கை தான்; அருமை பொருந்திய தங்கைதான். இதைப் போலவே பெண்கள் தங்களின் வயிற்றினிடமாகத் தோன்றிய மக்களிடமும், தங்களுக்கு மூப்பு வரினும் அது அங்கு பாராட்டப் படாமல் எக்காலத்திலும் அன்பும் ஆதரவுமாகவே பார்க்கப்படுகிறார்கள். தன் தாய் கிழவி என்று ஒதுக்கித் தள்ளினவன் எவனேனும் உளனோ? ஆகவே "பெண்களுக்குப் பெற்றோரிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் மூப்பில்லை" என்று அன்பின் ஆழ்ந்த தத்துவத்தை இப்பழமொழி எடுத்து விளக்குகிறது.

இதில் "பிள்ளைகளிடத்திலும் மூப்பில்லை" என்பதற்கு மற்றோர் பொருளும் உண்டு. தங்களின் வயிற்றுக் குழந்தைகள் விருத்தாப்பிய திசை யடைந்தாலும், அந்தக் காலம் வரையும் ஜீவித்திருக்கப் பெற்றோர்கள் கொடுத்து வைத்திருந்தால், அந்த விருத்தாப்பிய மடைந்த மக்களையும் சிறு குழந்தைகளாகவே பாவித்து அவர்களிடம் கொஞ்சுவார்கள். ஐம்பது வயதான குமாரனையும் சில தாய்மார், 'குழந்தாய்' என்று அழைப்பதைக் கேட்டிருக்கிறோ மன்றோ? இப்போது தானே குழந்தை உத்தியோகத்துக்குப் போனான் என்று தங்கள் குமாரனைப் பற்றிச் சொல்வதும் சாதாரண மன்றோ? பின்னும் தங்கள் குமாரன் எத்துணை உயரிய பதவியில் வீற்றிருப்பினும் தாய்மார் "வாடா அப்பா" என்று வெகு செல்வமாய் அழைப்பதும் உண்டன்றோ? 'அடா'—என்ற பதம் எவ்வளவோ ஈனச் சொல்லா யிருந்தபோதிலும், "அடா மகனே!" என்று ஒரு தாய் தன் மைந்தனை அழைக்கும்போது அங்கு அந்த 'அடா' என்ற பதம் எத்துணை அன்பு மயமாய் உன்னதப்பட்டுப் போகின்றது பாருங்கள்! அடா தம்பி என்பதில் உணர்த்தப்படும் அன்பு போல வேறு எந்தச் சொல்லும் 'அடா' என்ற பதத்தைப் போல் அன்பை வாரிவாரிக் கொட்டுவதாக அமையாது. உண்மையான அன்புக்கு உயரிய லக்ஷணம் யாதெனில் வெளி உபசாராதிகள் இல்லாமற் போய் மனதுக்கு மனதாகக் கலந்து ஒன்றுபட்டு அநுபவித்து ஆநந்தமடைவதுதான். அவ்விதமான ஒரு சிரேஷ்ட அன்பின் தத்துவத்தை இந்த 'அடா' என்ற பதம் ஆச்சரியப்படத்தக்க விதமாய் மனத்தின் உள்ளிருந்தும் வெளியே வாரிக் கொட்டுகின்றது. இவ்வித அன்பு முதிர்ச்சியின் ஊற்றுக் கண்ணுயுள்ள அன்னைக்குத் தனது அருமை மைந்தன் ஒரு அரச வாழ்வில் வீற்றிருப்பதாயினும் அவள் நெஞ்சுக்கு அரசனென்று படாமல் தன்னிடம் பால்குடிக்கும் குழந்தையாகவே தோற்றி ஆநந்தப்பட வைக்கும். இக்கருத்தைத்தான் "டில்லிக்கு பாதுஷா தல்லிக்கு பிட்டா" என்ற பழமொழி எடுத்து விளக்குகிறது. எவ்வளவோ பெரிய முறடர்களும் தங்கள் தாயின் முன்பாக அடங்கி விடுவது அந்த மாதாவினது ஆத்ம சக்தியின் அற்புதமன்றோ?

## 29. பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்.

அன்பின் சாஸ்வதத்தன்மையையும், சில சமயங்களில் அன்பு மாறிப் போவதையும் இப்பழமொழி விளக்குகிறது. பெற்றோர்களுக்கு எந்த நாளிலும் தங்கள் மக்களிடம் ஒரேவித அன்பு உண்டு. எவ்வளவு விரோதத்திலும் அது மாறுவதில்லை. ஆனால் பிள்ளைகளிடத்திலோ பல சமயங்களில் பேதப்பட்டுப் போகிறது. விசேஷமாய் ஆண் பிள்ளைகளிடத்தில் தான் இதைக் காணலாகும். மனைவி வருவதற்கு முன்பு தன் பெற்றோர்களிடம் வைத்த அன்பை, அவள் வந்தபின்பு சிலர் வைக்காமலே போய்விடுகிறார்கள். மனைவியின் முற்றிய மோகத்தில் பெற்றோரை அலக்ஷியம் செய்துவிடுகிறார்கள். அவர்களின் உணவுக்கும் செலவுக்குங்கூடக் கொடுப்பதில்லை. இதனிடையே மாமி மருகி மல்யுத்தம் மூண்டுகொண்டு விடுமாயின் சிலர் தம் மனைவி பக்கமேயாகிப் பெற்றோரை ஒதுக்கி மனம் கல்லாகி விடுகிறார்கள். அவ்விதம் தங்களை அநாதரவு செய்த காலத்தும்கூட அந்தப் பெற்றோர்கள் தங்கள் குமாரன் க்ஷேமமாக வாழவேண்டுமே யென்று கவலைப்பட்டு அவன் சுகத்துக்காகக் கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள். அது கருதியே தான் "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்" என்பது.

இங்கு இந்தப் பழமொழிக்குச் சம்பந்தப்படாத மற்றொரு குறிப்பையும் தர விரும்புகிறோம். ஆண்மக்கள்தான் பெற்றோர் விஷயத்தில் கல்லாய்ச் சமைவது காண்கிறோமே யன்றி பெண் மக்கள் எந்தக் காலத்தும் பெற்றோரிடத்து வற்றாத அன்பினராகவே விளங்குகின்றனர். உலகில் 'மாமி மருமகள்' பிணக்கு உண்டேயன்றி 'மருமகன்—மாமி' பிணக்கு இல்லை. மருமகளிடத்தில் அதிகாரம் செலுத்துவதும், தங்கள் பெண்ணின் கணவனை மருமகனிடத்தில் அவனுக்கு இசைந்து விரும்பியபடி நடந்து தங்கள் பெண் அவனிடம் நன்கு வாழவேண்டுமென்று நினைப்பதுமே எங்கும் உள்ள வழக்கம். ஆகவே மாமி மருகி வாதம்போல் மருமகனிடம் இல்லாததாலும் இங்கு அன்பு பெற்றோர்களிடமாவது பெண்ணினிடமாவது தடைபடக் காரணம் நேர்வதில்லை. மேலும் மனைவியின் சொற் கேட்டுத் தாய் தந்தையரை ஆடவன் மறப்பதுபோல், கணவன் சொற் கேட்டு எப்பெண்ணும் தன் பெற்றோரைத் தன் உள்ளத்தே மறந்ததில்லை. அன்பு மாறியதுமில்லை. தன் தாய் தந்தையர் தன் கணவனிடத்து மனஸ்தாபம் கொண்டிருப்பினும்கூடப் பெண் அவர்களிடத்தில் வைத்த அன்பை என்றும் மறவாள்.

(தொடரும்.)

---

### நிழலின் அருமை வெயிலில்!

மாணவனாயிருந்தபோது அந்த நிழல் வாழ்வின் சுகம், அதன் ஷோக்—அது வேறு. வீட்டுக்கு வந்ததும் கவலையற்ற புசிப்பு! ஆநந்தமான சுக நித்திரை! ஆனால் இப்போதோ?

# ஏகாதசி மகத்துவம்

ஏகாதசி உபவாசத்தால் ஸகல பாபங்களினின்றும் விடுபட்டு நிரதிசயாநந்த பரமபதத்தை யடையக் கூடும். துவாதசியில் ஸ்ரீ ஹரியினுடைய திருவாராதனத்தை நொடிப்பொழுது காலம் செய்த போதிலும் அதனாலே அநேகம் பிறப்புகளில் பதினொரு இந்திரியங்களாலும் அறிந்தும் அறியாமலும் செய்திருக்கிற கர்மங்களெல்லாம் அழிந்துவிடும். அநேகமாயிரம் அஸ்வமேதங்களின் பலமும், அநேக மாயிர வாசபேத விரதபலமும், ஏகாதசி யுபவாச பலத்தில் ஆயிரத்திலொரு கூற்றுக்குஞ் சரியாக மாட்டாவாம். துவாதசியானது அறத்தையும், பொருளையும், இன்பத்தையும், மோக்ஷத்தையும் மற்றச் சர்வாபீஷ்டங்களையும் கொடுப்பதாய் விளங்குகின்றது. ஏகாதசி விரதத்தைப் போலப் பாபத்திலிருந்தும் இரக்ஷிப்பது வேறொன்று மில்லை. ஆதலால் ஏகாதசி விரதத்தைவிட்டு மற்ற விரதங்களை யநுஷ்டிப்பவன் தன் கையிலிருக்கிற உத்தம போஜனத்தை விட்டுப் பிக்ஷையெடுக்கிறவனுக் கொத்திருப்பான். சமஸ்த இதிகாச புராணாதிகளும் பட்சங்கள்தோறும் வைதீக விரதமாகிய ஏகாதசி வந்து கொண்டிருக்கவும் ஒருவன் தான் முன்னே தவறுதலாகச் செய்துவிட்ட பாபகர்மங்களைக் குறித்து விசாரப்படுவானேனென்று சொல்லுகின்றன. எவன் ஏகாதசி விரதத்தை யநுஷ்டிக்க வில்லையோ அவன் பரமபதத்தை யடையப் போவதில்லை. ஏகாதசியில் உபவாசமிருக்கின்ற மகா விரதசீலனை அத்தினத்தில் போசனம் செய்யென்று வற்புறுத்தும் அதம புருஷனுக்கும், சிசுவையும், ஸ்திரீயையும், பசுவையும் அதம் பண்ணென்று சொல்லுகிறவனுக்கும் வித்தியாஸ மென்ன?

ஸ்ரீ ஹரிதினமாகிய ஏகாதசி விரதத்தைத் தசமியினன்றே தொடங்கி அன்று இராத்திரியும், ஏகாதசி முழுமையும், துவாதசி சாயங்காலமும்—ஆக நான்கு காலங்களிலும் போஜனம் பண்ணாமல், தசமியில் ஒருவேளை போஜனம் செய்து ஸ்திரீயோடு கலவாமல் தனியே சுசியான தரையில் சயனித்தும், இந்த உபவாசதினங்களில் நெல்லிப்பருப்பைச் சரீரத்தில் பூசிக்கொண்டு ஒரு நதியில் ஸ்நாநம் செய்தும் உபவாசமிருந்து இராத்திரியிலும் ஸ்ரீ சர்வேச்வராராகிய ஹரியை ஆராதிக்கக் கடவன். ஏகாதசியன்று இரவு முற்றும் நித்திரையை விட்டொழித்து பகவத்தியானத்திலேயே அவ்விரவு கழிவதும் தெரியாமல் போக்கி துவாதசியினன்று சூர்யோதயத்திற்கு முன்னேதானே ஸ்நானம் பூஜை யாதியன முடித்து துளசி தீர்த்தம் உட்கொண்டு, ததியாராதனம் நடப்பித்து பின்னே தானும் புசித்து அன்றைப் பகற்பொழுதை நித்திரை யில்லாமலே இதிஹாஸ புராணங்களால் பகவத்குணானுபவம் செய்து போக்கி அன்றிரவும் தனியே நித்திரிக்கக்கடவன். துவாதசியில் ஸ்ரீயப்பதியை இவ்விதம் ஆராதிக்கின்ற புருஷ சிரேஷ்டனுக்குப் பெரிய பிராட்டியாரோடு ஸ்ரீ சர்வேச்வர ரானவர் சீக்கிரத்தில் பிரஸன்னராய் ஸர்வாபீஷ்டங்களையும் கொடுத்தருளுவார்.

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | விகடப்<br>பிரதாபன்<br>(Registered.) | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
| --- | --- | --- |

# சென்னபட்டினத்துச் சிறப்பு !

## II.



என் விகட விநோத உலகத்தின் சிங்கார ரத்தினங்களே! இன்ப விற்பன விநய தைரிய சௌபாக்கிய சீலர்களே! சிறப்புச் சிறப்பென்றொரு சிரிப்புக் கதையைச் சென்ற மாதம் விகடன் குறித்து விரித்தேனல்லவா? விஷயம் பருத்துப் பெருத்துப் போகவே என் கருத்துக்களை அவ்வளவில் நிறுத்துவதாகி, மறுமுறை வறுத்துத் தருவதாய்ப் பொறுத்துக் கொள்ளச் சொன்னேனல்லவா? அந்த அறுப்பை அதைத் தொடர்ந்த உறுப்புகளோடு தொடங்கி இவ் வெள்ளைக் கடிதத்தைக் கருப்பாக்குகிறேன். பருப்பு பாயசம்போல் பருகி உருகிக் கேளுங்கள்! அகப்பட்டுக் கொண்ட பிறகுதானே அநுபவத்தினுடைய விலை தெரிகிறது! அப்போது தானே முன்பு விளங்காத தத்துவ ஞானமெல்லாம் தெளிவாகிறது! நாட்டுப்புறம் பட்டபாடு பட்டணத்தைக் கேட்டுப்பாரு—என்பது விகடனுடைய பழய பாட்டு. நாட்டுப்புறவாசி பட்டணத்தைக் கண்டு மலைப்பதை முன்பே முக்கினேன்! அதன் பின் நடக்கிற சங்கதிகள் என்னவென்றால், இந்த ஏதும் தெரியாத பேதையின் பசபசப்பு விழிப்பைக் கண்டு பலே பலே கிச்சடி யென்று போலீஸ்காரன் சந்தேகப்பட்டு நெருங்கிக் கொள்கிறான்! பிறகு அங்கிருந்து தப்பிக் கண்ட இடங்களில் பலபேர் காலில் விழுகிறான். ஐயனே! நாட்டுப்புறம், என் பாட்டுக்கு (பிழைப்புக்கு) வந்தேன், வீட்டு வேலை—ஓட்டு வேலை—தோட்ட வேலை—ஆட்ட வேலை—கூட்ட வேலை—ரோட்டு வேலை—மோட்டு வேலை—மாட்டு வேலை—எந்த வேலையாவது காட்டுமய்யா வென்று பல்லைத் திறந்துக் கெஞ்சுகிறான்! அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் வெகு அவசரமாய்ப் போய்விடுவோ ரநேகர்! மாடிமீது வசிப்பவனைக் கீழ் இருப்பவனிடம் கேட்டாலும் தெரியாத—அவ்வளவுக்குப் பிறரைப் பற்றி விசாரித்தறியாத — தம் தம் பாட்டைப்

பார்த்துக்கொண்டு போகிற—சுய நலமே கண்ணான பட்டினத்துச் சங்கதியை இந்தப் பேதை எப்படி யறியப் போகிறான்? எங்குமே அநாதவராய்ப் போய், கடைசியில் இல்லை யென்னுது ஆயிரத்தி லொரு வர் அநுதாபப்பட்டு இரக்கங் கொண்டு எங்காவது ஒரு ஜீவனத் துக்கு வழி காட்டினால் அங்கு போய்த் தொத்திக் கொள்ளுகிறான்! அந்த இடத்தில் "இளைத்தவன் பெண்டாட்டி எல்லாருக்கும் மச் சினி" என்பது போல, இவனை வெளியூரான் என்று கண்டு கொண் டவன் எல்லா வேலையும் இவன் பேரிலேயே சுமத்தி, "கழுதைக் குப் போகும்போதும் சுமை—வரும் போதும் சுமை என்பதாய் அளவுக்கு மேல் வேலையை வாங்கி அரை குறை கூனையும் நன்றாய் நிமிர்த்தி விடு கிறார்கள்.

***

இப்படிக் கஷ்டப்பட்டுச் சம்பா தித்து சில அணுக்களைக் கூலியாகப் பெற்று அத்துடன் கடைக்குப் போனால், "ஏமிரா திம்மப்பா" என்கிறான்! இதைக் கேட்டவுடன் இவனுக்கு ஆச்சரிய முண்டாகி, "நா—பேரு – நீக்கு – எட்லா—தெலு சுனு" என்கிறான்! அதற்குக் கடைக்காரன் "நீ—மூத்தினி— சூடங்கானே — தெலியலேதா"— என்கிறான். இந்த இளக்காரத்தால் அரை குறையாய்—"கெட்டுப்போன பறையனுக்குச் செத்துப்போன பசு வைத் தானம் கொடுப்பது போல" —ஏதுங் கெட்ட தானியத்தை அளந்து விடுகிறான்! பின் இவன் மாமிச பக்ஷணியா யிருந்தால்—'பட் டினத்துக் கறி' என்கிறார்களே, ஒரு நாளைக்கு வாங்கிச் சாப்பிடுவோ மென்று கசாப்புக்காரனிடம் போனு லோ — "மண்ணுங்கட்டி மாப்பிள் ளைக்கு எருமுட்டை பணியாரம்"— என்பதாய் எலும்பு தோல் துருத்தி களை யெல்லாம் சேர்த்துக் "கழுதை லத்தி கை நிறைய" என்று மூட்டை கட்டிக் கொடுக்கிறான். பின் கடல் மீன் ருசி எப்படி யிருக்கிறதென்று மீன் கடைக்குச் சென்றாலோ, அங்கு கையில் காப்பு—கொலுசு— அத்திக்கா — வேலங்கா — பூனு— புதுச்சேரி கொலுசும் — கோணக் காப்பும் — பாடகமும் — கழுத்தில் காசுமாலை — மோராமாலை—குண்டு பவழம்—நகார்சு குண்டு—கிள்ளட் டிகை—காதில் கம்மல்—ஜிமிகி— கத்திரி பாவல் — கொப்பு — மயிர் மாட்டி—முதலிய இன்னும் பல புது மோஸ்தர்களோடு பொன்காய்த்த— மரமாய்ப் பூணாரம் பூண்டு, பூனு— காசி, கொரநாடு—பம்பாய்ப் பட்டுப் புடவைகளைக் கட்டிக் கொண்டிருக் கும் பெண்களே கடையில் மீன் திருடுகிறார்களென்று மீன்காரி, உன் மாப்பிள்ளை என் மாப்பிள்ளை—நீ போக நான் போக என்று காதில் கேட்கச் சகியாத விதமாய் வண்டை வண்டையாய்க் கண்டபடி பேசுவதை யும்—முகத்தி லறைவதையும் மார்புத் துணியைப் பிடித்து மல்லு கொடுப்ப தையும்—தலை மயிரைப் பிடித்து இழுத்துக் குரங்காட்ட மாட்டுவதை யும் பார்த்துச் "சிங்க சொற்பனங் கண்ட யானை போல்"—நாட்டான் —திகிலடைந்து மீன்காரி கொடுக் கிற நொந்துபோன மீனை வாங்கிப் போகிறான்! இவ்விதமே ஒவ்வொரு வியாபாரத்திலும் இவன் வேற்றாள் என்று முகம் காட்டிவிட, அதனால் குப்பையில் எறிவதை இவன் கையில் தந்து அனுப்பிவிட, அதைக் கொண்டு திருப்தியடைய வேண்டி யதாயாகிறது.

***

இன்னும் நடக்கிற நடையில் வேகமாய் நடந்தாலும் தண்டனை, சோர்ந்து நடந்தாலும் சோதனை,

தெருவிலே பாட்டு பாடினாலும் 'பீட்டு' சேவகன் பிடித்துக்கொள்வான்; ஆட்டம் - பாட்டம் - கூத்து வேடிக்கை - விநோதம் - பார்க்க வேண்டுமென்றால் 'நோட்டு' மாற்றியாகவேண்டும். இன்னும் கூட்டம் கூட்டமாய் நிற்கவுங் கூடாது-ஓட்டமாய் ஓடவுங்கூடாது - நாட்டமாய்ப் பார்க்கவுங் கூடாது - "அதற்கு, இதற்கு" — என்று ஓரம் ஒதுங்கக்கூடாது - இரண்டு கை வீசி தாராளமாய் நடக்கவுங் கூடாது - குழந்தை குட்டிகள் வெளியில் வந்து விளையாடவுங் கூடாது - மீறி விளையாடினாலோ மோட்டார் ஏறிவிடும். இப்படிப்பட்ட பட்டினத்திலே நிற்கப் படுக்க இடமில்லாத கொட்டடி யொன்றுக்கும் கூலி 4 - 5 - 6 - 7 - 8-ரூபாய்! பத்தெட்டுக் குடிகளுக்கும் ஒரேயொரு கக்கூஸ் ஆவதில் அந்த ஆபாசமும் வேறே! ஒருவர் கக்கூஸுக்குப் போனால், அங்கு வைத்த செம்பை அவர்கள் எப்போது தூக்குவாரோ வென்று மற்றவர்கள் பொறுத்துச் சகித்துத் துடிக்கும் தொந்திரவும் வேறே! அடுப்பாங் கட்டிக்கு விலை - மண்ணுக்கு விலை - காய்கறிக்கு ஒன்றுக்கு மூன்று பங்கு விலை - தண்ணிக்கு விலை - காற்றுக்கு விலை - குப்பை செத்தைக்கும் விலை - எல்லாவற்றுக்கும் துட்டு போட்டு ஆகவேண்டும்! "கறக்கிறது உழக்கு - உதைக்கிறது பல்லு போக"—என்பதாய்ப் பட்டணத்தில் பணம் சம்பாதிப்பதும்போதும்- தட்டுக் கெட்டுத் தடுமாறி விட்டு கீரை வழியாகி, குட்டும் பட்டு மொட்டையாகிக் கொட்டம் அடங்கிக் கஷ்டப்பட்டு நஷ்டப்பட்டு "சட்டி சுட்டது கை விட்டது"—என்று "பழய குருடி கதவைத் திறவடி" என்பதாய், "இட்டார்க்கிட்ட பலன்" என்பதையும், எந்த போனாலும் தன் துர்த்திசை விடாது என்பதையும் உணர்ந்து முட்டி தட்டி பட்டணத்தின் சுகம் வெட்ட வெளியாய்ப் பட்டம் பகல் போல் தோன்றி முன்போலவே தன் ஊர் போய்ச் சேர்ந்து அவதிப்படுகிறான் - படுகிறார்கள்! இதற்காகத்தான் விகடனும் "நாட்டுப் புறம் பட்ட பாடு பட்டணத்தைக் கேட்டுப் பாரு" என்று ஒரு பாட்டாக மேலே சொன்னேன்!

***

இனி விகடன் இந்த நாட்டாள்களை விட்டு விட்டு 'நாகரீக' நடுத்தர ஆட்களை எடுத்துக் கொள்ளுகிறேன். பட்டினத்தில் என்ன தவறி நடந்தாலும் அதைக் கேட்பாரில்லை. தன் ஊரில் - கிராமத்தில் ஒருவன் செய்ய அஞ்சக்கூடிய காரியங்களைப் பட்டணங்களில் தாராளமாகச் செய்யத் துணிந்து விடுகிறன்! நாட்டுப் புறத்தில் ஸமூகக் கட்டுப்பாடிருப்பதும், பட்டணங்களில் அது அவ்வளவாக இராதிருப்பதுமே காரணம். ஸமூகக் கட்டுப்பாடு குறையக் குறைய ஜனங்கள் இந்திரியங்களை அடக்காது அவைகளுக்கு அடிமைகளாகி விடுகிறார்கள்! செய்யக் கூடாததை யெல்லாம் செய்யத் தைரியப்பட்டு விடுகிறார்கள்! பட்டணத்து விபசாரமோ படுமோசம்! தொட்டாலோ ஒட்டிக் கொள்ளும் ரோகம் கட்டையில் வைக்கும் வரை தீராது! மதுபான மயக்கங்களோ தித்திப்பான கள்ளு என்ற விளம்பரங்களோடு விளையாடுகின்றன! இனி வாசிக்க வரும் பையன்களோ பல கெட்டதிலும் தொட்டுக் கொண்டு முட்டிக் கொள்வதே பெரும்பான்மையாகும்! ஊருக்கு மட்டும் வெகு நன்றாகப் படிப்பதாய்க் கடிதம் போகும்! இங்கு அவர்கள் படிக்கும் பலவித மீறிய படிப்புகளைப் பெற்றோர்கள்

அறியப்போகிறார்களா? நேரில் வந்து கண்டால்தான் ஏதோ உண்டு.

***

இதற்கு அப்பாலிருக்கிறது பட்டினத்து வேடிக்கைகள்! நாலு வரி எழுதத் தெரியாதவன் கூலிக்கு ஒருவரை எழுதச் செய்துவிட்டு வெளிக்கு வெகு சுலபத்தில் பத்திராதிபராய் விடுகிறான்! கைநாடியறியாதவன் இங்கு பிரபல வைத்தியனாய் விடுகிறான்! தன் ஊரில் ஒரு வேலைக்கு வதியற்றவன் இங்கு பெரிய மனிதனாகி விடுகிறான்! உபநாயகி (வைப்பு) வகையில் வந்த பல கலப்படமான மக்கள் பட்டணத்தில் மகா உயர்ந்த குலத்தினராய் விடுகிறார்கள்! அவர்களிடம் பெண்ணைக் கொண்டும் — கொடுத்தும் ஆனபிறகுதான் அந்தக் கசுமாலக் குப்பை வெளியே வருகிறது! தாழ்ந்த குலத்தான் இங்கு உயர்ந்த குலத்தான்! ஊரில் ஒரு காசுக்கு மதிக்கப்படாதவீணன் இங்கு பெரிய பெரிய தொகைக்கும் மதிக்கப்பட்டு அவனிடம் பலத்த இருப்பு இருப்பதாகவும் காட்டிக்கொண்டு வருகிறான்! ஏமாற்றலுக்குப் பட்டணம் பெரிய ராஜா! மோச நாசங்களுக்கோ மகா களஞ்சியம்! ஓட்டைக் கடியாரங்களெல்லாம் ஒருமிக்க வி.பி.யிலே வெளியூர்களுக்குப் பார்ஸல்களாகிவிடும்! கடையில் ஒன்றுமில்லாமற் போனாலும் அவர்களின் கேட்லாக் 100-பக்கம் இருக்கும்! எல்லாப் பத்திரிகைகளிலும் அவர்களின் விளம்பரங்கள் நிமிர்ந்துகொண்டு நிற்கும்! 20-விதமான வெவ்வேறு பெயர்கள் வைத்து 20-கம்பெனிகளை ஒருவனே ஒரு மூலை வீட்டுக்குள் நடத்தி மகா பிரபல கம்பெனி போல் வெளியூர்களுக்குத் தோற்றச் செய்து விடுவான்! வெளியூராரை எப்படி எப்படிப் பிரமிக்கவைத்துத் துட்டு பறிக்கலாமென்று மோசக் கருத்துடன் ஆராய்வதில் பட்டணத்துச் சிறப்பு வெகு பேர் போனது! இன்னும் நாவல்கள் மோசம்-புஸ்தகங்கள் மோசம்-நகைகள் மோசம்-ஜவுளிகள் மோசம் - மூர்மார்க்கட்டு விலை மோசம்-தரகர்களின் மோசம்-மோகனவல்லிகளின் மோசம் - பகட்டுகிற மோசம்-கம்பி நீட்டுகிற மோசம் - மோட்டார்களில் ஏறிப் பெரிய மனிதராக வீசுகிற மோசம்-மூட்டைகளைத் தூக்குவதாய்ச் சொல்லி அவற்றோடு மறைந்து விடுகிற மோசம் - தபால் பெட்டி மயக்கு (Post Box No. 00000) களின் மோசம் - இன்னும் எத்தனையோ கோடானு கோடி மோசங்களெல்லாம் பட்டணத்துக்குப் பெரும் சிறப்புகளா யிருந்து கொண்டு வெகு பெருமைப்பட வைக்கின்றது! பட்டணத்திலே நாறி நாற்றமெடுக்கும் சங்கதிகளெல்லாம் வெளியூராருக்கு எப்படித் தெரியப் போகிறது? எல்லாம் மோசம்! வெகு வெகு நேசம்! ஐயோ அத்தனையும் நாசம்! கையிருப்புத் தொகையோ காலேவீசம்! குடிப்பதோ கூழ்! கொப்பளிப்பதோ பன்னீர்! ஏறுவதோ வாடகை மோட்டார்! இறங்குவதோ வாடகைப் பங்களா!-இப்படியாக உள்ள பட்டினத்துச் சிறப்புக்களையும், நற்குணப் புள்ளிகளின் பேரைக் கெடுக்கும் பிறப்புக்களையும் விகடன் சுருக்கிச் சுருக்கிச் சொன்னேன்! நீங்கள் பெருக்கிப் பெருக்கிப் பேதமைப் பிரமிப்புகளை யகற்றிப் பெரியபெரிய புத்தி கொள்ளுங்கள். ராம்! ராம்! சுபம்! சூ!! சுவாஹா!!!

---

# நட்பு

(372-ம் பக்கத் தொடர்ச்சி.)

**தீநட்பின் தீமை; சகவாச தோஷம்.**

**நல்லொழுக்க மில்லாதாரிடத்து** நன்மை யாதொன்று மிருப்பதில்லை ; ஆதலால் அவர் உறவு கட்டாயம் கேடுகொடுக்கும். ஒட்டு வியாதியை விலக்க ஔஷதங்கொள்ளலாம் ; ஆனால் தீயார் தொடர்பாலுண்டாகுந் தீமையைத் தவிர்க்க ஒரு வழியுமில்லை. ‘அல்ப சகவாசம் பிராண சங்கடம்’ அன்றோ ? படர் கொடி தான் பரவிய விடத்தைப் பழுதாக்குதல்போல, போலி நட்பினர் தம்மைக் கொண்டவருக்குக் கேடுண்டாக்குகின்றனர். எங்ஙனமெனில் ஊணுங் கொடி படர்ந்திருக்கும் ஒருயர்ந்த துளசிச் செடியையும், அக்கொடியின் ஒருபாகந் தான் என்று கருதப்படுதல்போல, கெட்ட குணத்தாரோடு கூடியிருப்பவர் எவ்வளவுதான் நல்லவராயிருப்பினும், கெட்ட குணமுடையோராகவே கருதப்படுவர். மேலும் அவ்வூணுங்கொடி படர்ந்தேறப்பெற்ற அந்துளசிச் செடி அதற்கு மேல் வளரவொட்டாது அப்படியே அமுக்கப்பட்டு யழிவெய்துதல்போல தீயாரோடு கூடிய நல்லோரும் அவர்களுடைய தீக்குணங்களுக்கும் கெட்ட செய்கைகளுக்கும் அடிமை கொள்ளப்பட்டு அவதிப்படுவர். இவ்வாறு தீயோர் சிநேகத்தால் வருந் தீங்கை சகவாச தோஷம் என்பர். பொய்யா மொழிப் புலவரும்,

“ நிலத் தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத் தியல்பதாகு மறிவு ”

என்றனர். ஆதலின், ஒருவனது குணதோஷங்களை யறிதற்கு அவன் நண்பனே கண்ணாடி ; நல்லார் பொல்லாரை நடக்கையாலன்றி யவர் நண்பராலு மறியலாம். இங்கு “பன்றியோடு கூடிய பசுங்கன்றும் மலந் தின்னும்” என்னும் பழமொழி கவனிக்கத் தக்கது.

***

**ஏன் நடப் பாராய வேண்டும்?**

இங்ஙன மிருத்தலின், கெட்டவரைக் கூடுவதிலும் கஷ்டத்துடனுவது தனியே யிருத்தலே உத்தமம். ஆனால், அவ்வாறு தனித்திருத்தல், ஆன்ம விசாரஞ்செய்யும் யோகியர்க்கும், ஏனைய விசாரஞ் செய்யும் அறிஞருக்குமே யன்றி மற்றோருக்குச் சாத்தியப்படாததாம். ஆதலின் அத்தகையோர் நல்லோரை ஆராய்ந்தறிந்து அவரோடு நட்புக்கொள்ளல்தான் விரும்பற்பாலது.

**சிநேகிக்கத் தகாதவர்**

அங்ஙனஞ் செய்யுங்கால், ‘துஷ்டரைக் கண்டால் தூரவிலகு’ ‘வஞ்சருறவை வழுவி விலகு’என்பவற்றை யுணர்ந்து, நட்பியல்பில்லாரை எவ்வாற்றானும் விட்டு நீங்கி, ‘சேரிட மறிந்து சேர்ந்து’ ‘இணக்க மறிந்து இணங்கு’தல் வேண்டும். ‘மூர்க்கரோடிணங்கேல். ‘அஞ்சலார் தங்களுடன்நட்பாயிருப்பதில் அரவினொடு பழகுவது நன்று’ ‘வெடுவெடுக்கின்றதோ ரவிவேகி யுறவினில்

விவேகியொடு பகைமை நன்று' என்பவைகளைக் கவனித்து, 'மனம் மாண்பு இலாதாரை அஞ்சி யகலல், எனை மாண்புதானினிது நன்கு.' கல்வி யறிவில் லாத மூடன், காமுகன், கடுமொழி பேசுங் கோபி, நம்பினவரை வஞ்சிக்குங் கீழ் மகன், மனதினால் ஒன்றுபடாத சத்துரு, யாதொரு காரியத்திற்கும் பயனை யெதிர் பார்ப்பவன், பொய் பேசும் புல்லறிவாளன் ஆகிய இவர் கள் சிநேக பாத்திரரல்லர்; இவர்களது நட்பு துன்பந்தருவதாம். ஆகவே 'புல்லிக் கொளினும் பொருளலார்தங் கேண்மை கொள்ளாமல் விடுத லினிது—' என்றபடி வலிய வந்து சிநேகித்தாலும் சிநேக பாத்திரரல்லாத வரது நட்பை ஏற்காமல் விடுதல்வேண்டும்.

※"பொய்வழங்கி வாழும் பொறியறையுங் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் நட்பையும்—ஊழினால்
ஒட்டிவினைநலம் பார்ப்பானு மிம்மூவர்
நட்கப் படாஅ தவர்"

என்று நல்லாதனார் கூறுவதையுங் காண்க. நிற்க,

***

கெட்ட குணமுடையவர் மிக்க அன்போடு சிநேகித்தாலும் அது கொண்டவருக்கு நன்மை பயக்காமையின் விடத்தக்கதேயாம். அவர்க ளோடு மிக நெருங்காமலும் விட்டு நீங்காமலும் பழகுவதே முறை. ஏனெனில், அவர்களை மிக நெருங்கினாலோ சக வாசதோஷம் சித்திக்கும்; விட்டு நீங்கினாலோ விரோ தத்தை யேற்கவேண்டிவரும்.

கெட்ட குணத்தான்

சுயநலத்தைக் கருதியே நட்பவரது நட்பைக்கொண்டென்ன? கொள் ளாமலென்ன? அவர்கள் சுயநலப்புலி. பொருளையே குறித்து வஞ்சித் தொழுகும் கணிகையரையும் கள்வரையும்போலத் தயை தாக்ஷண்ணிய மில்லாத வஞ்சகராதலால் வெறுக்கத்தக்கவர். அத்தகையோர், 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் உற்றுழித் தீர்வார்.' ஆதலின் 'உறவல் லர்.' ஆபத்துக் காலத்திற்றான் நண்பர்களின் உதவி நமக்கு அவசியம் வேண்டியிருக்க, அச்சமயத்தில் அவர்கள் நம்மைவிட்டு நீங்குவாராயின் அவர்கள் நேசம் நமக்கு என்னத்திற்கு? (தொடரும்.)

லக்ஷ்மி வெங்கடரமணன்.

---

※ திரிகடுகம்.

## காரிய உறவு! அது முடிந்ததும் பிரிவு!

சிலர் நெருங்கிப் பழகத் தாங்களே வலுவில் வந்து கூடுகிறார் கள். பிறகு தாங்களே ஒரு புது சச்சரவைக் கிளப்பி விட்டுப் பிரிந்து போகிறார்கள். பிறகு மீண்டும் ஒன்று சேரவந்து முன் போலவே மறுபடியும் பிரிந்து போய் விடுகிறார்கள். இது சிலரது போக்கு! இதை மாற்றாந்தாய்மாரிடத்தும், உள்ளன்பில்லாமல் ஒப்புக்கு உப சாரம் படிப்போரிடத்தும் காணலாம்.

# பிரபஞ்ச தரிசனம்

ஆங்கிலேயரைப் போல் நாம் இருக்கவேண்டு மென்றாவது, ஜப்பானியர்களைப் போல் நாம் ஆகவேண்டு மென்றாவது அவர்களின் வழக்கங்களையும் மார்க்கங்களையும் பின் பற்றுவதில் காரியமில்லை. நாம் நமது சொந்த வழக்கங்களையே சீர்திருத்திப் பிறருடைய வழக்கங்களில் சிலாக்கியமானதாயும் நமது ஸ்வபாவத்துக்கு இசைந்ததாயும் உள்ளவைகளை மட்டும் அனுசரித்து நமது ஹிந்து மதத்தின் ஆழ்ந்த கோட்பாடுகளுக்கு லோபமுண்டாகாமல் பாதுகாத்து வருவோமானால் நமது தாய் தேசமாகிய இந்தியாவுக்குப் பெருமையையும், அத்தேச வாசிகளாகிய நமக்கு இதரரைக் காட்டிலும் மேலான கீர்த்தியையும் சம்பாதிக்கலாகும். லௌகீக தந்திரங்களில் முன்னுக்கு வரவேண்டு மென்கிற பேரவாவினால் நமது கோயில் குளங்களையும், வேத சாஸ்திராதிகளையும் நொறுக்கித் தள்ளி விடக்கூடாது. அப்படிச் செய்வோமானால் நாளடைவில் நாம் இதர ஜாதியாருக்குள் ஐக்கியமாய் மறைந்து விடுவோமே யல்லாமல் ஹிந்துக்கள் தழைத்தோங்கினார்கள் என்கிற பிரஸ்தாபத்துக்கிடம் இராது. நாம் கிறிஸ்துவர்களாய் அல்லது மகம்மதியர்களாய்ப் போனால் நமக்கு என்ன ஐச்வரியம் வந்தென்ன? அது இத்தேசத்துக்குப் பெருமையாகுமா? ஸ்வரூபம் நாசமடைந்த பின்னர் இந்தியா எப்படியானா லென்ன? ஆகையால் இந்தியாவுக்கு உயிர்நிலையாயும் இத்தேசத்தவருக்கு அடையாளமாயுமுள்ள உத்தமமான தர்மங்களை விடாமல் காலஸ்திதிக் கேற்றபடி சில்லரை ஆசாரங்களை மட்டும் சீர்திருத்திக்கொண்டு செல்லவேண்டும்.

***

உலகத்தில் யோகம் என்றும், க்ஷேமம் என்றும் இரண்டுண்டு. இதில் யோகம் என்பது இருப்புக்கு மேல் அதிகம் உண்டாவது. க்ஷேமமாவது இருப்புக்கு மோசமில்லாம லிருப்பது.

யோகத்தில் பல சமயங்களில் க்ஷேமத்துக்கே ஹானிவந்து விடுகிறது. அதாவது ராவணேசுவரன் ராஜ்யம் போலாம். ஆகையால் எதிலும் மிதமிஞ்சிப் போகலாகாது. மித மிஞ்சினேம், மிஞ்சவில்லை யென்பதற்கு தத்துவ ரகசியங்களடங்கிய நமது வேத சாஸ்திரங்களே பிரமாணம். அவைகளால் விளக்கப்படும் தர்மங்களே நமது எல்லையைக் காட்டுகின்றன. எந்தக் காரியத்தைச் சாதிக்கும் பொருட்டேனும் நாம் அந்த எல்லையை அதிக்கிரமிப்போமானால்—காரியம் கைகூடிய போதிலும்—முடிவில் சுக முண்டாகாது. பட்டணத்தைக் கொளுத்திப் பட்டணத்தைப் பிடித்த கதையாக முடியும்.

***

வேத சாஸ்திரங்கள் நேற்று இன்று ஏற்பட்டவை யல்ல. அவைகளில் எக்காலத்துக்கும் உரிய தர்மங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளில் காட்டிய சில தர்மங்கள் சாசுவதமானவை. மற்றும் சில தர்மங்கள் கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி மாறுபாட்டை யடையக் கூடியவை. பிந்திய

தர்மங்களைத் தான் நாம் இக்காலத்துக் கேற்றபடி மாற்றலாம். முந்திய தர்மங்களைத் தொடக்கூடாது. அவைகள் அப்படியே காக்கப் படுமளவும் இந்தியாவும் ஹிந்துக்களும் உண்டு. அவைகள் லோபமடையுமிடத்து நாம் நமக்குள்ள எல்லாவற்றையும்—மானத்தையுங் கூடப்—பறி கொடுத்து விடலாம்.

***

சாசுவதமான தர்மங்களைக் காக்கவேண்டு மென்று மேலே சொன்னோம். அத்தர்மங்களை நிலை நிறுத்துகிற தெப்படி யென்றால், அந்தத் தர்மங்களைப் பூஜிப்பதினால் தான். உதாரணமாக: மதுபானம் செய்யக்கூடாதென்று எல்லோரையும் நாம் கட்டுப்படுத்துவது சாத்தியமில்லா விட்டாலும் மதுபானம் செய்வதுதான் சரி—அது இக்காலத்துக்கு அவசியம் வேண்டிய வழக்கம்—அதை எல்லோரும் ஆசரியுங்கள்—என்று இதராளுக்குப் போதனை செய்யாமலும், மதுபானம் செய்யாதவர்களைக் கண்டால்—"ஐயா, நீர் உத்தமர், நான் ஏதோ ஒரு அவசியத்தை முன்னிட்டோ, என் அறியாமையினாலோ இந்தக் கெட்ட வழக்கத்தில் இறங்கி விட்டேன், நீர் அதில் பிரவேசியாதவராகையால் நீர் சிரேஷ்டர்" என்று வணங்கியும், அந்தத் தர்மத்தைப் பூஜிக்க வேண்டியது. மூக்கறையன் கதையைப் போல் தன் மூக்கறுந்த துக்கத்தினால் எல்லார் மூக்கும் அறும்படி செய்யக்கூடாது. தன் கணவனை இழந்த விதவைக்கு இஷ்டமிருந்தால் மறு விவாகம் செய்து கொள்ளட்டும். ஆனால், மறு விவாகத்தில் இஷ்டப்படாத விதவை இவளைக் காட்டிலும் சிரேஷ்டமானவள் என்பதிலும் ஆசார யோக்கியமானவள் என்பதிலும் சந்தேகமா? ஆகையால் தர்மங்கள் உயிரோடிருக்க வேண்டும். அதிலும் ஆணி வேரான தர்மங்கள் நகரக்கூடாது.

***

உலகம் கட்டுப்பட்டு நிற்பது தர்மங்களால்தான். தர்மங்களுக்குப் பழுதுண்டாக்குவோமானால் நமது சித்த சுத்தி தக்ஷணமே அழிய ஆரம்பித்துவிடும். ஒரு கட்டுப்பாட்டுக்குள் நம் மனத்தை யடக்கி ஒழுங்காய்ச் செலுத்துவ தென்பது பிறகு பொருந்தாமற் போய்விடும். ஒருவன் ஒரு பொது ஸ்திரீயைக் கொண்டிருக்கின்றான். அவள் அவனுக்கு உபநாயகியாக இருக்கின்றாள். அவனுடைய நண்பனொருவன் அந்த ஸ்திரீயைத் தன் வசப்படுத்திக் கொள்ள விரும்புகிறான். இவ்வித சிந்தனை ஒருவனுக்கு விவாகத்தின் மூலியமாய் அவனது சொந்த சொத்தாகி விட்ட ஸ்திரீயினிடம் ஒருபோதும் செல்லாது. அந்த மனுஷ்யன் அருகில் இருந்தாலும் அல்லது தூரநாட்டில் இருந்தாலும் இங்குள்ள அவனது மனைவி அவனுக்கு எக்காலத்துக்கும் சொந்த ஸ்திரியே தான். அவனுக்கே சொந்தமான ஒரு தனிச் சொத்து தான், அதைப் பிற ஆடவனெவனும் கவர முடியாது. அதற்கு உலகமும் ஒப்பாது. இந்த விவாகம் என்பது ஆணிவேரான மூலதர்ம மாகும். அது அழியாதிருக்கு மளவும் உலகத்தில் தர்மத்தின் கட்டுப்பாடும் க்ஷேமமும் நிலைத்திருக்கலாம். அந்தத் தர்மம் அழிந்தாலோ பிறகு ஸர்வ நாசம் தான். ஆகவேதான் மூலதர்மங்களை நாம் காக்கவேண்டு மென்கிறோம். இடையேயுள்ள தர்மங்களை மட்டும் காலசந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு நாம் உபாயமாய்ச் செப்பனிட்டுக் கொள்ளலாம்.

***

இதை மற்ெறாரு வகையாலும் விளக்கிக் காட்டலாம். கணவன் மரித்ததும் அவேனாடு உடன்கட்டை யேறுதலை ராஜாராம்மோகன்ராய் என்ற புண்ணிய புருஷர் தடுத்துவிட்டார். அப்படித் தடுப்பதற்கு முன்னர் அது பெரிய தர்மமாயிருந்து ஆசரிக்கப்பட்டுப் பிரபலம் கொண்டிருந்தது. அதைக் கூடாதென்று அவர் தடுத்தது சரியே, அதை விட்டுவிடும்படி திருத்தியதும் சரியே. அதனால் ஆணிவேரான மூலதர்மத்திற்கு எவ்வித பாதகமும் நேர்ந்து விடவில்லை. மூலதர்மத்துக்குள்ள பெருமை எக்காலத்தினும் இருந்துகொண்டுதான் இருக்கும். அது என்ன பெருமை யென்று கேள்விகள் உதிக்கலாம். ஒரு ஸ்திரீ உடன்கட்டை யேறக்கூடா தென்று தடுக்கப்பட்டுள்ள இந்நாளில் கூட தனது பர்த்தா ஆவிதுறந்தாரென்று கண்டதும், அந்தத் துக்க மிகுதியால் அவரைப் பிரிந்து தான் ஜீவிக்கச் சகியாதவளாய், ஆ! என்று விட்ட பெருமூச்சின் வழியே அவளது பிராணனும் பிரிந்து போய் அவள் தன் இறந்த கணவனோடும் முடிந்து விடுவாளானால் அவளை மகா உத்தமி என்று ஏன் துதிக்கக் கூடாது? பிரயத்தன பூர்வகமாய்ப் பிராணனை இழப்பது அவிவேகம். அதை நாம் தடுக்கலாம்—திருத்தலாம். அவை பிற்கால தர்மங்களாம். ஆனால் தன்னை யறியாமலே பிரிவாற்றாமையில் க்ஷணப் பொழுதிலேயே பிரிந்துவிடுகிற உத்தமியின் பிராணனை நாம் போகவிடாது இழுத்துப் பிடித்து இருத்த இயலுமோ? சாவித்திரியைத் தன்னோடு தொடர்ந்து வராமல் தடுக்க எமதர்மனால் முடிந்ததோ? தன்னை யறியாமலே பிராணன் பிரிந்து விடுகிற ஒரு அபூர்வ தன்மை ஆழ்ந்த பதி பக்தி காரணமாய் நேரும் பதிவிரதா மகாத்மியங்களில் ஒன்றாம். அதைத் தடுக்க வசமோ? அப்போது நாம் அந்த பதிவிரதா மகாத்மிய மூலதருமத்திற்கு வணங்கி வழிவிட்டுக் கொடுத்துவிட வேண்டியதுதான். இப்பொழுது திருத்த இயலாத ஆணிவேரான மூலதர்மங்கள் இன்னதென்றும், திருத்த—மாற்றத் தக்கனவான பிந்திய தர்மங்கள் இன்னதென்றும் தெளிந்து கொள்ளலாம். எனவே, மூலதர்மத்தின் எல்லைகளை மீற யத்தனிக்காமல் நடந்துவரக் கடமைப் பட்டிருக்கிறோம். இக்கடமையைப் போற்றும் வரையில் நாமும், உண்டு. நமது ஹிந்துமதமும் உண்டு. நம்மை எக்காலத்தும் காக்கவல்ல நன் மருந்து ஹிந்துமதம் என்று அறியக்கடவோம். ஒரு மதத்தைக் காப்பது அதன் ஆணிவேர் போலுள்ள மூலதர்மங்களேயாம். ஒரு வீடு—ஒரு குடும்பம் இவ்வித எவ்வளவோ மூலதருமங்களையும் தழுவியதாய் அவற்றை ரக்ஷித்துக் கொண்டு செல்லுகின்றது. அந்தத் தர்மங்களை அந்த வீடு கைவிடுமாயின் அத்துடன் அந்த வீட்டுக் குடித்தனத்துக்கும் அழிவு நெருங்கியதுபோல் தான். வீட்டுக்குச் சொல்லியது நாட்டுக்கும் பொருந்தும். ஆகையால் நாம் எவ்விதப் பயிற்சியையும் நாகரீகத்தையும் அடைய யத்தனித்த போதிலும், அதோடு ஹிந்து மதத்தையும் காப்பாற்ற முயற்சி செய்து வருவோமானால்,—நமக்கு ஹிதமானதும், லோகத்தார் மெச்சத்தக்கதுமான நாகரீகத்தை நாளடைவில் நாம் அடைவோம்.

---

ஐரோப்பிய மிஷனிரிகளுக்கு மட்டும் எப்படிப் பணம் சேருகிறது? அவர்கள் அந்தப் பணத்தைக்கொண்டு எவ்வளவு வேலைகள் செய்கிறார்கள்? நமது மடாதிபதிகள் மட்டும் நாளுக்குநாள் பிசினாரிகளாய் வெகு மோசமாகப் போவானேன்?

# விநோதம்

## இருவரின் விடை :—

மாமனார் :—என்ன அப்பா! நீங்கள் இருவரும் இலையில் அவ்வளவு அன்னத்தை அப்படியே வைத்துவிட்டீர்களே? அன்ன லக்ஷ்மியை இப்படி எறியலாமா? இந்தத் துர்பிக்ஷகாலத்தில் இப்படிச் செய்யக்கூடாதே.

சிடுசிடுத்த மருமகன் :—(கோபத்தோடு) என்ன ஐயா! இதற்கா இவ்வளவு பிரஸங்கம்! இந்தச் சோற்றுக்கு என்ன விலை? சொல்லும், அதைக் கொடுத்துவிடுகிறேன்.

சாந்தகுண மருமகன் :—நான் சாப்பிடாமற் போனாலென்ன மாமா? எனக்கும் தங்கள் குமாரத்திக்கும் இந்த ஒரே இலைதானே? என் மிகுதிப் பிரஸாதத்தை அவள் பூர்த்தி செய்துவிடுகிறாள். அது தெரியாமல் இலையில் வைப்பேனா?

***

## பணம் வருமா?

ராமன் :—அந்தப் பத்திரிகைக்கு ஏதாவது வியாசம் ஒன்று எழுதித் தரக் கூடாதா?

கோபாலன் :—கொடுக்கிறேன், ஆனால் பணம் வருமா?

ராமன் :—எல்லாவற்றிற்கும் பணத்திலேயே திருஷ்டியாயிருந்தால் முடியுமா? பணத்தையே கவனிப்பவர்கள் மனுஷ்யர்களைக் கவனிக்க மாட்டார்கள். பணம் பெரிதா?—அன்பு பெரிதா? பணம் பெரிதா?—குணம் பெரிதா?

***

## நோகாத அடி :—

சீதா :—எனக்குக் கோபம் வந்து குழந்தைகளை யடித்தாலும் அவர்களுக்கு அது நோகாது.

ராதா :—அதென்ன அதிசயம்! அடித்தால் நோகாதிருக்குமா?

சீதா :—பாழுங் கோபம்தான் மூடத்தனமாய் வருகிறது. அந்தக் கோபம் ஒன்று போதாதா? இனி அடியும் வேண்டுமா?—என்றெண்ணிக் குழந்தைகளின் மீது கையை வைத்து அந்த என் கையிலேயே நான் அடித்துக் கொள்வேன். உடனே என் கோபமும் போய்விடும்! குழந்தைகளும் முதலில் பயந்து திருந்தி பிறகு சிரிப்பார்கள்!

***

## கலியாண நிச்சயம் :—

தகப்பனார் :—நமது பையனுக்கு எவ்விதத்திலும் தை மாதத்தில் கல்யாணம் நிச்சயம், முகூர்த்தமும் பார்த்தானது.

தாயார் :—எந்த இடத்துப் பெண்ணை முடிவு செய்தீர்கள்?

தகப்பனார் :—அதுதான் ஒன்றும் நிச்சயப்படவில்லை!

***

ஏக்கம் :—

மனைவி :—என்ன இப்படித் திகைத்து ஏக்கமா யிருக்கிறீர்கள் ?

புருஷன் :—அதோ வண்டி வருகிறது தெரியவில்லையா ? அதில் வருகிறவர்கள் வீட்டில் சில நாள் விருந்தாளியா யிருந்தேன் ; அப்போது அது சுகமாயிருந்தது. இப்போது அவர்க ளெல்லாம் நம் வீட்டுக்கு வருகிறார்கள். பதிலுக்குப் பதில் செய்தாகவேண்டுமே, நகை செய்வதற்கென்று பெட்டியி லிருக்கிற பணத்துக்குத் தொந்தரை வந்ததே யென்றுதான் ஏக்கம் !

***

மொழிபெயர்ப்பா ? சுயமா ?

மோகனு :—அந்த நாவலை இங்கிலீஷ் மொழிபெயர்ப்பென்று சொல்லுகிறாய் ? ஒருபோது மில்லை, சுயமாகவே எழுதியதென்று படிக்கும்போதே தெரியவில்லையா ?

லீலா :—இவ்வளவுதானு நீ அறிந்தது ? அந்த இங்கிலீஷ் நாவல் இப்போது கிடைப்பதல்ல, வெகு காலத்துப் புஸ்தகம். 1854-ம் வருஷத்தில் போடப்பட்டது. அதைத் தெரிந்தவர்கள் எல்லோரும் செத்துப் போனார்க ளென்று ஆசிரியரின் எண்ணம். அதனால்தான் சுயமாய் இயற்றியதென்று சொல்லிவிட்டார் !

---

ஈசா ! என்னே நின் திருவுளம் ?

உலகம் ஒரு நாடக கூடம்! உயிர்களெல்லாம் நடர்கள். அவரவர் நடனம் முடிந்ததும் மறைதலாம். எல்லாரும் போக வேண்டியவர்களே எனினும், இருந்து இனி வாழவேண்டிய இளம் பருவத்தினர் கண் மூடிக்கொண்டு விடுதல் கொடுமையன்றோ ! முதியோர் இருக்க —இளையோர் முடிதலும், வறியோர் நெடுநாள் ஜீவியம் காண— அநுபவிக்க எல்லா பாக்கியமும் இருப்போர் அல்பமான ஆயுளில் நழுவுகையும் என்னென்று கூற !

சோம்பேறிகளில் பலவிதமுண்டு. சிலர் யாதொரு வேலையும் செய்யாவிட்டாலும் பிறரை ஹிம்ஸியார். சிலர் தாங்கள் வேலை செய்யாதிருப்பதோடு பிறர் வீட்டில் இஷ்டமானபடி யுண்டு நாட்களைக் கழிப்பர். இந்த சோம்பேறிகளின் அதிகாரத்துக்கு வரம்பில்லை, இவர்களுடைய கோணப் பார்வையும், மலைப்பாம்புபோல் ஸதா படுக்கையில் கிடப்பதும், படுத்தவுடன் நித்திராதேவி பிரசன்னமாய்விடும் விந்தையும், வீண் வார்த்தைகளைப் பேசிக் காலத்தை வியர்த்தமாக்கும் பான்மையும் விவேகிகளால் கண்கொண்டு பார்த்துப் பொறுக்க முடியாது.

# பெண்கள் பக்கம்

## ஒரு ரிஷி பத்தினி

உலகத்தில் ஸ்திரீகளாய்ப் பிறந்தவர்களுக்கு அந்திய காலம் ஸமீபிக்கும் வரை பர்த்தாவின் பாதஸேவையே ஸ்வர்க்கத்தைப் போல் ஆநந்தத்தைத் தரக்கூடியது. பதியின் முகாரவிந்தமே ஸ்திரீகளின் மனதில் நிலையாய் நிற்கும். அவன் சொற்களே ஹிருதயத்தில் குதித்தாடும். பதிக்கு விநயமாய் நடந்து கொள்வதே ஸ்திரீகளுக்கு ஸன்மானம். ரிஷிபத்தினிகள் ஒவ்வொருவரும் தங்கள் பர்த்தாவினிடம் அன்பு கொண்டு ஆயுள்காலம் வரை ஆநந்தமயமாய்த் தங்களின் ஜீவியத்தை நடத்தினர். அவர்களின் காய மனோ வாக்குகளில் ஸதா பதியின் மேலுள்ள பிரேமமே நுழைந்து திரிந்தது. பதியைத் தவிர பரதெய்வம் உலகில் வேறில்லை யென்று ஒரே தீர்மானம் செய்து கொண்டிருந்தனர். யாராவது தங்களிடம் தர்மோபதேசங்களைக் கேட்க வருவாராயின் அவர்களுக்குப் பதி பக்தி பாராயண கிரந்தத்தை ஆதியோடந்தமாகக் கற்பிப்பர்.

***

முற்காலத்தில் சாண்டிலி என்னும் ரிஷி பத்நி தனது குணங்களால் பூலோகத்திலும் தேவலோகத்திலும் மரியாதை பெற்று வந்தாள். சுமனா என்னும் அரசகுமாரி அவளுடைய மகிமையைக் கேள்விப்பட்டு அவளிடம் சென்று நமஸ்கரித்து, தாயே! உன் மகிமையை நான் கேட்டு உன்னை சரணாகதியடைய வந்தேன். என்னை யேற்றுக்கொண்டு நான் உலகத்தில் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். தாங்கள் தேவதைகளால் பூஜிக்கப்படுகிறீர்கள். ஸத்குணத்தால் சோபிக்கிறீர்கள். உங்கள் முகத்தில் திவ்ய காந்தியும் சந்திரனுடைய தேஜஸும் பிரகாசிக்கின்றன. தேவலோகத்து வஸ்திராபரணங்களை யணிந்து கொண்டிருக்கிறீர்கள். இவ்வித பதவியை ஸாமான்ய தபஸ்வினிகள் அடைந்ததில்லை. உங்கள் தபஸ் எப்பேர்ப்பட்டதோ அதை எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டு மென்றாள்.

***

அதற்கு சாண்டிலி ராஜகுமாரியைப் பார்த்து, குழந்தாய்! நான் எவ்வித தபஸும் செய்யவில்லை. காவியாடைகளை யணிந்தவளல்ல. ஸமாதியிலுட்கார்ந்து ஸ்வாஸ ஸ்தம்பனங்களைச் செய்தவளல்ல. ஆனால் நான் செய்து வந்ததைக் கேள். என் பர்த்தாவின் வார்த்தைக்கு எதிர் பேச்சுப் பேசமாட்டேன். பதி எவ்வித கடும் சொற்களை வழங்கினாலும் அதை மகாப் பிரஸாத மென்று எற்றுக்கொள்வேன். வந்த அதிதிகளை அதிக விநயத்தோடு ஆதரித்துப் பர்த்தாவின் உத்தரவைப் பெற்று உபகரிப்பேன். மாமன் மாமிகளைக் கண்டால் பயபக்தியோடு அவர்கள் சொற்படி நடப்பேன். பதியின் ஸகோதரர்களை என் உடன்பிறந்தவர்களைப் போல் நினைத்து அவர்களை

ஆதரவு செய்வேன், அவர்களின் மனைவிகளை என் உற்ற நேசர்களென்று நினைத்து ஹாஸ்ய வசனங்களால் அவர்களைத் திருப்தி செய்வேன். சண்டையிட எனக்குத் தெரியாது. அவர்களின் ஐசுவரியம் என்னுடையதென்றும், அவர்கள் பெற்ற குழந்தைகள் நான்பெற்றவைகளென்றும் நினைத்திருந்தேன். எப்போதும் அழுதவளல்ல. எனக்குக் கோபமே கிடையாது. வியஸனப் படுபவளைப்போல் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு புருஷன் மனதில் அருவெறுப்பை யுண்டாக்கினதில்லை. உரத்த சப்தம் உச்சரியேன். இது வேண்டு மென்றும், அது வேண்டாமென்றும் பிடிவாதம் செய்யமாட்டேன். அண்டை அயலாருடன் வீண் வம்புகளைப் பேசேன். தெருவாசலில் நின்று யாரையும் பரிகாசம் செய்ததில்லை. காரியமாய் வெளியில் சென்று ஆயாஸப்பட்டு வந்த பதியைப் பீடத்தில் உட்கார வைத்து அவருக்குச் சிரமந்தீர உபசாரம் செய்வேன். புருஷனுக்கு இஷ்டமில்லாத பலகாரவர்க்கங்களை வீட்டில் செய்யேன். அவர் மனப்படியே நான் நடப்பதோடு மற்றவர்களையும் நடக்கச் செய்வேன். பதி பரதேசம் சென்றால் எப்போது வருவாரென்றும், அவர் எங்கிருந்தாலும் க்ஷேமத்துடனும் உத்ஸாகத்தோடும் இருக்கவேண்டு மென்றும் பகவானைப் பிரார்த்தனை செய்வேன். அவரில்லாத ஸமயத்தில் அலங்காரங்களைச் செய்து கொள்ளேன். ஸுகந்தங்களைத் தொடேன். பட்டாடைகளைக் கண்ணெடுத்தும் பாரேன். பர்த்தாவை ஒரு தினமாவது கோபித்தவளல்ல. அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் அவர் இஷ்டப்படியே நடந்து கொள்வேன். என் மேல் அவருக்குள்ள பிரேமையில் அவரது மதனதாகத்தை என்னாலியன்றளவு திருப்தி செய்வேன். அவருக்கே சொந்தமான என் தேகத்தை அவர் பிரியப்படி சுகித்துக் கொள்ளட்டு மென்று மனஸ்பூர்வமாய் விட்டு எல்லாவகையிலும் இணங்கி நடந்து கொள்வேன். ஸய்யாக்கிரகத்தின் காரியங்களை வெளியிற் சொல்லேன். வீட்டு ரகஸ்யத்தை எப்போதும் வெளிவிட்டவளல்ல. வீண் தொந்தரையை அவருக்குக் கொடுத்ததில்லை. ஸம்சார தர்மத்தில் உள்ள வறுமையை எவருக்கும் தெரிவியேன். எல்லாம் நிறைந்திருப்பது போலவே பாவித்து, பிறருடைய திருஷ்டிக்கும் அவ்விதமே தோற்றம் காண்பித்து குடும்பத்தை உலகத்தில் ஒரு கௌரவம் பெற்றதாக ஆக்கி நடத்துவேன். மகா பதிவிரதையான அருந்ததியை எப்போதும் மனதில் நினைத்தும் பர்த்தாவினிடம் பதி பக்தியோடும் விநயமாய் நடந்து வந்ததால் எனக்கு இவ்வித பதவி கிடைத்தது. எல்லோரும் என்னைக் கொண்டாடுகின்றனராயினும் அந்த ஸத்கீர்த்தியாவும் என் பிராண பதிக்கே சொந்தமானது. அவரே நான் வணங்கும் பிரத்யக்ஷ தெய்வம். அவரே என் ஹிருதய லோகத்தில் குடிகொண்டிருக்கும் அன்புக் கடவுளாவார். ஓ இராஜ குமாரி! நீ உன் பிரேமபதியிடம் இவ்வித ஆசரணையை அனுஸரித்தால் பரமோத்கிருஷ்டமான பதவியைப் பெறுவாய். நம்மை நம்பிய நாதனை நாம் ரக்ஷித்து அவரது இல்வாழ்க்கையை உன்னதப் படுத்தினால் அதன் பலன் நமக்கே திரும்பிவரும். நாமும் உலகத்தில் உயர்வுக்கு உரியவர்களாவோம்—என்று ஸத்போதனை செய்து அரசகுமாரியை ஆசீர்வதித்து அனுப்பினாள். நமது பெண்மணிகள் மேற்கூறிய புத்திமதிகளை நன்றாய் மனதில் பதிய வைத்து பாரத பூமியில் பதிபாத ஸேவையே பரம பாக்கிய மென்றெண்ணி இல்லறத்திற் கேற்ற துணைவிகளாய் வாழக்கடவர்.

# கவிதா விலாஸம்

## படிக்காசுத் தம்பிரான்

இவர் செங்குந்த மரபிற் றோன்றியவர். இவருக்கும் கும்பன் என்பவருக்கும் கல்வி விஷயமாக அடிக்கடி சண்டை நேரிடுவது வழக்கம். கும்பன் ராமநாதபுரத்தில் அரசு புரிந்த பெருங் கொடை வள்ளலாகிய ரகுநாதசேதுபதியைக் கண்டு தனது கல்வித்திறத்தினைக் காட்டிப் பல்லக்கு முதலிய ஸன்மானங்கள் பெற்றுத் திரும்பும் சமயத்து, படிக்காசன் அச்சமஸ்தானத்துக்கு வர, இப்புலவரையும் மன்னர்பிரான் உபசரித்து வரவழைத்துக் கும்பனின் கல்வி வன்மையைக் கூற, அது கேட்டுப் பொறுமல் படிக்காசன் கூறிய வெண்பா :—

ஏதை யறிவான் இவனுக்கேன் பல்லக்குச்
சேதுரகுநாத சிங்கமே—ஓதுகின்ற
சுச்சைக்கும் பச்சுரைக் காய்கறிக்காமோ வதுபோல்
தச்சுக்கும் பன்சோல் தமிழ்

என்று கூறவும், இதைக் கேட்ட கும்பன் திடீரென்று எழுந்து அடா என்ன சொன்னுய், உன் சங்கதியைச் சொல்லட்டுமா வென்று சினந்து கூறிய வெண்பா :—

தங்கை தமக்கைகட்குத் தான்பணயம் வாங்குகின்ற
பங்கமற்ற கைக்கோளப் பையாகேள்—எங்கள் குலம்
ஜெகத்குரு வென்று தேசமுணராதோ
பகலிரவும் ஆராய்ந்து பார்.

என்று கூறினுராம். பிற்பாடு அரசன் இவர்கள் இருவரையும் சாந்தப் படுத்தி ஒருவர்மே லொருவர் புகழ்ச்சியாகப் பாடும்படிக் கேட்டுக் கொள்ள, அரசன் மொழியை மறுக்க முடியாது இவர்கள் அதே விதமாகப் பாடிச் சமாதானமாயினராம்.

## II

## *ஸ்ரீ ஹரிக் கண்ணி

(382-ம் பக்கத் தொடர்ச்சி.)

25. ஏகநீதானெனவே யெண்ணியுன்றுள்வணங்கும்
யூகமதைநாயேற் குவந்தருள்வாய் ஸ்ரீ ஹரியே.

26. காமக்குரோதாதி களாற்பாவமெல்லாமுன்
ஞமந்தனைமறந்து நான்செய்தேன் ஸ்ரீ ஹரியே.

* All Rights Reserved to the Author.

27. செய்தேனெனவுரைத்த தீங்கெல்லாநீபொறுத்து
வைகுந்தந்தென்னை வாழ்விப்பாய் ஸ்ரீ ஹரியே.

28. எத்தனையோசென்ம மெடுத்துவீணய்க்கழித்தேன்
அத்தனையிலிச்செனன மாச்சுனக்காள் ஸ்ரீ ஹரியே.

29. ஆளாச்சுதென்றவுரை யற்பமும்வீணுகாம
ளாகுமுன்னெனக்கு நல்லருடா ஸ்ரீ ஹரியே.

30. உடன்பிறந்தாருற்று ருலகிற்பலர்சூழ்ந்து
கடன்கொடுத்தார்போற்பொருளைக் கைக்கொண்டார் ஸ்ரீ ஹரியே.

31. யாராலுமென்றனுயிர்க் காதரவேயில்லையெனப்
பாராமற்போனேனேன் பாழ்துணைத்தால் ஸ்ரீ ஹரியே.

32. மனதுக்கிசைந்தபடி மாபாதகங்கள்
அனுதினமுஞ்செய்த வபராதியான் ஸ்ரீ ஹரியே.

33. செய்தமகாபாதகங்கள் சேர்ந்தென்னைவாட்டாமற்
கைதந்துகாக்கக் கடனுனக்கே ஸ்ரீ ஹரியே.

34. எண்ணிறந்தசென்மமெடுத் தெந்நல்வினைசெய்தாலுங்
கண்ணுநீ யாங்கிலையேற் காட்சியுண்டோ ஸ்ரீ ஹரியே.

35. இரங்கிக்கருணைபுரிந் தீடேற்றவேண்டும்
வரங்கொடுத்துநின்றன் மலரடிதா ஸ்ரீ ஹரியே.

36. பாவமிகச்செய்தேயுன் பாதமிசையே வீழ்ந்தால்
ஆவதென்னவென்பா ரகிலத்தோர் ஸ்ரீ ஹரியே.

37. வனவேடன்முன்னர் மராமராவென்ன
அனவரதவாழ்வை யருளினாய் ஸ்ரீ ஹரியே.

38. கேசவாவுன்றன் கிருபைபெறப்பாடாமல்
ஆசைவலைக்கு ளழுந்தினேன் ஸ்ரீ ஹரியே.

39. ஆசைவலைக்கு ளழுந்தியதுபோதுமினி
மோசம்வருமுன்னெனக்கு மோட்சந்தா ஸ்ரீ ஹரியே.

40. மோட்சமந்நளாவிடினும் மோசம்போகாவழியைக்
காட்சிபெறவந்தெனக்குக் காட்டுவாய் ஸ்ரீ ஹரியே.

(தொடரும்.)

தந்தை: சங்கு. இராமசாமி நாயுடு.

---


## அன்பு மல்லிகையின் நறுமணம்!

மனப்பூர்வமாய் எழுதும் கடிதங்களில் அன்பு மல்லிகையின் இனிய வாடை தானே தோன்றும். உபசாரத்துக்கு எழுதுங் கடிதங்களின் தன்மையை எவ்வளவு மறைத்தாலும் உடனே தெரிந்துபோம்! எது மறைக்கப்படுகிறதோ அதையே உற்று ஆராய்வர். எவ்வளவு மறைப்பினும் முதலில் தெரிவது அதுவே!

# சிறு மணித் திரள்

(405-ம் பக்கத் தொடர்ச்சி.)

197. "இந்த தேசத்தில் எல்லா வகை அபிப்பிராய முடையவர்களுக்கும் பிரதிநிதி ஸ்தாபனமாக உள்ள தேசீய ஸ்தாபனம் காங்கிரஸ் மகா சபைதான். எல்லா மனிதர்களுக்கும் அது தேசபக்தியை அதிகரிக்கச் செய்கிறது." (ஸ்ரீமதி ஸரோஜினி.)

198. "ஸந்தோஷத்துடன் செய்யப்படாத சேவை எதுவும் செய்பவருக்காவது, அதை ஏற்பவருக்காவது உதவியளிப்பதில்லை. ஆனால், உண்மையான ஸந்தோஷ உணர்ச்சியுடன் சேவை செய்யப்படும்போது நமது சுகங்களும் இதர விஷயங்களும் மறைந்து விடுகின்றன." (மகாத்மா.)

199. நன்றாகப் படித்தவனும், ஒன்றும் தெரியாத அசடுகளும் சபைகளில் நல்ல பெயர் வாங்கலாமென்று கூறுவார்கள். படித்தவர்கள் சாமர்த்தியமான பேச்சினாலும், அசடுகள் வாயை மூடிகொண் டிருப்பதாலும் நல்ல பெயர் பெறலாமாம்.

200. எவ்வகையான விஸ்தாரத்துக்கும் வரமுடியாத விஷயங்களைக் கொண்டாவது, நேர்மையை விடுத்தாவது தர்க்கித்தல் குதர்க்கம் எனப்படும்.

201. அமெரிக்காவில் பூர்வத்தில் விபசாரம் செய்த ஸ்திரீயை 'விபசாரி' என்று எழுதிய அட்டையை அவள் நெற்றியில் கட்டி வீதிகள் தோறும் இழுத்துச் செல்லுவாராம்.

202. "பத்திராசிரியர்களிட மிருந்து நாம் மகத்தான நன்மைகளை எதிர்பார்க்கின்றோம். ஆனால் அவர்கள் என்ன நிலைமையில் இருக்கின்றார்களென்பதை நாம் கவனிக்காமலிருந்து வருகிறோம்." (கனம் வி. எஸ். சாஸ்திரியார்.)

203. அன்பு என்பது ஒருவருக் கொருவர் காட்டும் பிரியம். அன்பை வாங்க அன்பைக் காட்டவேண்டும்.

204. பொது விஷயங்களில் சம்பந்தப்பட்டு நிற்பதால்தான் உத்தியோக சம்பளம் இன்னும் அதிகரிக்கப் படாமல் இருக்கிறதென்று ஒருவர் காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ரானடேவுக்குச் சொல்லியதற்கு அவர் பின்வரும் பதில் கூறினார்:—"ஐயா, தங்களுக்கு நான் வந்தனம் செய்கிறேன். எனக்கு அவசியமான தேவைகள் சிலவே; கொஞ்சம் கிடைத்தாலும் சுகமாய் ஜீவனம் செய்வேன். ஆனால் என் தேச நன்மையைக் குறித்து எனக்கு எது உண்மையென்று தோன்றுகிறதோ அதை நான் வெளிப்படுத்தியே தீர வேண்டும்" என்றார்.

205. "மிருக பலத்தைவிட அன்பானது இன்னும் பெரிய தீவிரமான சக்தியாகும். அன்பு இருப்பதாகச் சொல்லிக்கொண்டு அதே சமயத்தில் ஒன்றும் செய்யாமல் கையைக்கட்டிக் கொண்டிருப்பவன் பயங்கொள்ளியாவான். அவன் மனிதனுமல்ல. மிருகமுமல்ல." (மகாத்மா.)

206. " சரீர பலஹீனத்திலிருந்து விடுபடுவது கஷ்டம். ஆனால் ஒருவனுடைய ஆத்மசக்தியைக் கொண்டு உலகத்தையே எதிர்த்து நிற்க முடியும்." (மகாத்மா.)

207. "ஸத்தியம், அன்பு, தெய்வம் இவைகளிடத்தில் எனக்கு அளவு கடந்த நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கலாகாதா?" (மகாத்மா.)

208. "கண்டவர்களை யெல்லாம் சண்டைக்கு அழைக்கும் தடியர்கள், தங்களுடைய தாயைக் கண்ட மாத்திரத்தில் பெட்டிப் பாம்பைப்போல் அடங்கி விடுகிறார்கள். இதன் கருத்தென்ன? தாயின் அன்பானது பிள்ளையிடமுள்ள மிருக குணத்தை ஜெயித்து விடுகிறது." (மகாத்மா.)

209. ஒருவன் கொள்ளும் பழக்க வழக்கங்களி லிருந்துதான் நற்குணம்—தீக்குணம் என்பது உதயமாகின்றது. மற்றவர்கள் நம்மை மதிப்பது—நம்மிடம் என்ன இருக்கிறது என்பதைக் கொண்டல்ல, நாம் எப்படி நடக்கிறோம் என்பதைக் கொண்டேதான்.

210. சச்சரவு நேரிடுங்கால் விவேகமாயிரு; வீட்டில் சாந்தம் கொள்; அக்கம் பக்கத்தினருக்கு நீதிபதியாக நில்; மனசாக்ஷிக்குப் பயப்படு; வாழ் நாட்களைச் சந்தோஷத்துடன் வரவேற்றுக்கொள்; எவ்வேலையிலும் சுறு சுறுப்பு காண்பி. காரியத்தில் ஸத்தியத்தை நினை.

211. "உண்மையான சமய ஒழுக்கத்தின் தத்துவமென்ன வென்றால், உள்ளன்புடன் எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான பக்தியே யன்றி வெறும் வெளிச் சடங்குகளல்ல. நிர்மல பக்திக்கு சில தன்மைகள் அமையவேண்டும். அவை வந்தடையவே வெளிச் சடங்கையும் அமைத்தார்கள் முன்னோர்கள்." (குடியரசு.)

212. தேசத்துக்கு நன்மை செய்யவேண்டுமென்னும் எண்ணம் உதிக்குமுன் நல்ல மனிதன் என்று பெயரெடுக்க வேண்டும். தேசாபிமானியாவதற்கு (1) பயமின்மை, (2) உண்மை, (3) மனுஷத் தன்மை, (4) தன்னை யடுத்தோரை ஆதரித்தல், (5) நியாய வரம்புக்குள்ளிருந்து கடமையைச் செய்தல்—முதலியவற்றைத் தழுவவேண்டும்.

213. கிழிந்துபோன கந்தைத் துணிகளுக்கு ஒருவன் எத்தனை காலந் தான் ஒட்டுப் போடமுடியும்? ஒருவன் தன்னுடைய துற்குணத்தை எவ்வளவு காலம் வரையில்தான் மறைத்துவைத்துப் பகட்ட முடியும்?

214. " இன்னும் அதிக தைரியமும், செய்கைகளும், ஊக்கத்துடன் புதிய விஷயங்களை ஆரம்பித்துச் செய்வதும் அத்தியாவசியம்." (ஆசார்யா பி. ஸி. ராய்.)

215. ஸ்திரீலோலன் தன் பணம் வற்றியபிறகும் கூட விலைமகளிரது வாசல் வழிச்சென்று ஒரு சுற்று சுற்றிவர வியர்த்தமாய் ஆசைப்படுகிறான். வீட்டுப் பெண்கள் வெளியூர் சென்று வீட்டில் சமையல் இல்லாதபோதுகூட நித்தியமும் காய்கறி வாங்கிய பழக்கம், அந்தக் கடைவீதியை வெறுமனே யாவது ஒரு சுற்றுச்சுற்றிப் பார்த்துவரச் செய்கிறது.

216. மனிதர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம் உடனே சிக்ஷை கிடைக்காவிடினும், அவர்களுக்குப் புத்திரோற்பத்தியை மட்டும் கடவுள் தடுத்து அதைமட்டும் பிரத்தியக்ஷமாய்க் காட்டுகிறார். ஒரு சமயம் குழந்தைகள் பிறப்பினும் அவைகள் குடும்பத்தை ஸர்வநாசம் செய்யத் தோன்றியவைகளாய் வளர்கின்றன.

217. தரித்திரத்தில் வாழ்ந்தோருக்குப் பிறகு செல்வம் சேரினும் பழய தரித்திர புத்தி நீங்காது. நான் எங்கே போவேன்—என்னிடம் காசு ஏது என்பர். எல்லாம் இருந்து ஏராளமாய்ச் செலவிட்டுப் பின் வறுமை காண்பினும், எல்லாம் இருப்பதாகவே எண்ணிச் செலவிட அந்தப் பழய கை அந்தப் பழய தாராளத் தன்மையிலேயே தூண்டிவிட்டுச் செய்யவைக்கும்.

218. மகளிரோடு ஊடாடும்போது கண்ணாடிப் பாத்திரங்களோடு ஊடுமாப்போல் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

(தொடரும்.)

---

மேல் நாட்டாருடைய நாகரீகத்தில் சிலர் விசேஷ கஷ்டத்தையும் சிலர் விசேஷ சௌக்கியத்தையும் அநுபவிக்கிறார்கள். புகைவண்டியில் சிலர் நித்திராபங்கமன்னியில் சௌக்கியமாய்ப் போய்ச் சேருவதற்காக எவ்வளவு கூலியாட்கள் வேலைக்காரர்கள் இரவெல்லாம் தூக்கம் கெட்டு விழித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. எஞ்சீனோட்டிகள் புகையிலும் நெருப்பிலுமே தம் வாழ்நாளைப் போக்கவேண்டி யிருக்கிறது. நிலக்கரிச் சுரங்கங்களில் சூரிய வெளிச்சமே யில்லாமல் இரவு பகலும் எத்தனையோ ஆண்கள் வேலை செய்கிறார்கள். பட்டண வாசங்களில் வீடுதோறும் புகுந்து புகுந்து சாக்கடைகளையும் மலங்களையும் கழுவிய வண்ணமாய் எத்தனை ஜனங்கள் ஜீவிக்கிறார்கள். இதைவிட இழிவான தொழில் என்ன வேண்டும்? இதைச் செய்கிறவன் நமது ஸகோதரன் (Our brother) என்று வாய் விஸ்தாரமாய் மட்டும் பேசுகிறார்களே! உண்மையில் நாகரீகமுள்ள எவனுகிலும் தனது சொந்த ஸகோதரன் அவ்வித இழிவான செய்கையில் அமர சம்மதிப்பானு? இம்மாதிரி புதிய நாகரீகத்தில் பார்க்கப்போனுல் எத்தனையோ கோரங்களிருக்கின்றன. எப்போதும் விசேஷ சுகத்தில் விசேஷ கஷ்டம் குடிகொண்டே இருக்கும்.

## பெண்மணிகளின் சௌந்தரிய காந்தியே ஈசனின் இன்ப பரிபூரண ஒளி!

கண்ணைக் கவர்ந்து காதல் ஊட்டும் கட்டழகு ஆடவரிடத்தில் சிறு பான்மையே. பெண் மக்களோ உலகை வசீகரித்து நலப்படுத்துதற்கே தோன்றிய மோஹன சுந்தர ரூபிகளாவர். அவர்களின் சௌந்தரிய ராசிகளே இவ்வுலகை அழிவின்றிப் பெருக்கிக் காக்கின்றது. அத்தயை பரமலாவண்யத்தை நிர்மல உள்ளமாய் வணங்கித் துதித்திடுக.

# நாநாவிஷயக் குறிப்புகள்

வீரன் யுத்தத்திற்குச் செல்லும்போதெல்லாம் தன் கையிலுள்ள கூரிய கத்தியைப் பத்திரமாய்க் காப்பாற்றுவதில் நோக்கமாயிருக்கிறான். எழுதப் படிக்கக் கற்றவர்கள் தங்களின் எழுதுகோல்களையும் புஸ்தகங்களையும் ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளுகின்றனர். ஸந்யாஸிகள் தண்டக்கோலையும் கமண்டலத்தையும் பாதுகாப்பார்கள். தனவந்தர்களோ தங்கள் சொத்துக்களைக் காப்பாற்றுவதில் கருத்துள்ளவர்களாயிருப்பர். வியவசாயிகளோ பிராண ரக்ஷணைக்கு வேண்டிய தான்யராசிகளின் உற்பத்தியில் தங்களின் திருஷ்டியைச் செலுத்துவர். அதுபோலவே, பாரத சந்தானங்களாகிய நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துள்ளும் ஜன்ம பூமியின் க்ஷேமத்துக்கான லக்ஷ்யத்தைப் புகுத்தி 'விடுதலை வாழ்வு'க்கென்றே ஜீவித்திருப்போராய் நம்மை நினைத்துக்கொள்ளவேண்டும்.

***

எச்சிலைக் கண்டவுடன் சுவானங்கள் ஒன்றின்மேலொன்று சீறி விழுந்து கடித்து தன்னினத்தையும் உறவையும் பச்சாத்தாபத்தையும் கிஞ்சிற்றும் பாராட்டாமல் தம் சுயநலத்தையே முன்வைத்துத் திரிகின்றன. அது மிருகத் தன்மை. மனுஷத் தன்மை அப்படியல்ல. சுயநலத்தைப் பாராட்டாதவனும் மனுஷ்யனல்ல. அப்படி சுயநலம் ஒன்றையே பாராட்டுகிறவனும் மனுஷ்யனல்ல. பொது நலத்துக்காகவும் பிறர் நலத்துக்காகவும் அநேக ஸமயங்களில் சுயநலத்தை விடுதற்குப் பின்வாங்கக்கூடாது. நமது குடும்ப ஸம்ரக்ஷணைக்காகத் தர்மமாய் அமைந்திருக்கவேண்டிய சுயநலப் பற்றையும் நாம் துறந்துவிடக் கூடாது. அவ்வாறு நாம் சுயநலம் துறந்தோமானால், பிறரது அன்னத்திற்கு எதிர்பார்த்து உண்ணும் சோம்பேறியாய் உலகத்துக்கு வீணர்களாவோம். இதனால் நமக்காயினும் நமது நாட்டிற்காயினும், நன்மை உண்டாமா? சுயநலம் என்பது நாம் செய்து முடிக்க வேண்டிய தர்ம நியாயமான கடமைகளில் ஒன்று. அவ்விதமே பொது நலமும் பிறர் நலமும் நம்மால் செய்விக்கப்பட்டுத் தீரவேண்டிய மற்றொரு கடமையாம். எதிலும் எல்லையின் அளவு கடவாதிருக்கவேண்டும். மனுஷ்ய சரீரத்தை என்னதான் போஷித்து வளர்த்தாலும் அது 15-அடி உயரம் வளரக்கூட வில்லையே. ஏன்? அது தன் இயற்கை எல்லைக்குள் அடங்கி நிற்பதால்தான். அதுபோல் நம் காரியங்களும் ஒரு எல்லையில் அடங்க வேண்டும்.

***

பற்பல குணங்களை யுடைய மனிதர்கட்குத் தக்கபடி தன் நடத்தையை இணைத்துக் கொள்வோனே புத்திமான். இது ஸங்கீதம் பாடும்போது தம்பூருக்கு சுருதி கூட்டுவது போலுளது. ஒருவன் கோபியாயிருப்பான், அவன் எஜமானனாக வந்தால் அதற்காகப் பயந்து நாம் வேலையை விட்டுவிடலாமா? அல்லது அவ்வெஜமானனோடு சண்டையிடலாமா? இரண்டு வகையிலும் நம்மை நஷ்டம் நாடிவரும். வேலையை விட்டு நீங்கினால் ஜீவன மார்க்கம் போய்விடும். வீட்டுச் செலவுக்குப் பதில் சொல்ல

முடியாமல் விழிக்க நேரிடும். எஜமானனேடு சண்டை போட்டால் நம்முடைய ஸம்பாத்யத்தில் அடிக்கடி அபராதத் தொகைக்கு ஈடுபடுத்தி வறியர்களாகவேண்டும். ஆதலின் இரண்டு விதமும் செய்வது பயனில்லை. அவரவர்களின் ஸ்வபாவத்தை யறிந்து அதற்குத் தக்கபடி விவேகமாய் நடந்து கொள்வதே சுலப மார்க்கமாம்.

***

புருஷன் வீட்டுக்கு வந்தவுடன் துஷ்டைகள் செய்யும் கோர கிருத்தியங்களுக்குக் கணக்கில்லை. "ஐயையோ! இந்தச் சமையல் வேலை என்னால் செய்ய முடியவில்லை. நான் எங்கேயாவது ஓட்டம் பிடிக்கிறேன். என் பிராணன் போனாலும் போகட்டும்; இனி இந்த வீட்டில் இருப்பதில்லை. பாழாய்ப் போக என்னை இந்த வீட்டில் கொடுத்துத் தள்ளினார்களே" என்று புலம்பத் தொடங்கி விடுவார்கள். பசியால் வாடி வெளியிலிருந்து வந்த கணவனே இந்தக் கோலத்தைக் கண்டு இதுதானு கலியாண சுகம் என்று திகைத்துச் சோர்வான். இவ்விதம் கொண்ட கணவனைச் சிறுமைப் படுத்தி மனம் நலியவைத்து அதிசீக்கிரத்தில் தானே அவனை இழந்து வைதவ்யம் தாங்குவதில் இந்த அக்கிரமிகள் என்ன பிரயோஜனத்தை யடையப் போகின்றனரோ!

***

வைத்தியர்களிற் சிலர் அற்ப வியாதியையும் மகா பெரியதாய் வர்ணித்து நமது நெஞ்சில் வெகு கவலையை யுண்டாக்கிவிடுவர். —"சரி சரி, எல்லாம் வாத பித்த தோஷம்! இந்தத் தேகத்துக்குள் இன்னொரு சரீரம் புகுந்துகொண்டிருக்கிறது, மூல தாரத்தில் சூடு; அதனால் சாப்பிட்ட சாதம் ஜீரணமாகிறதில்லை; ஏனம்மா எட்டு நாட்கள் வரையில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளாவிட்டால் கண்ணெரிச்சல் உண்டாகிறதன்றோ— என்று கேள்வி கேட்டு வீட்டுப் பெண்களைத் தம் பேச்சுக்குத் துணையாக்கிக்கொண்டு, உள்ளுக்குச் சாப்பிட லேகியமும், தலைக்குத் தேய்த்துக் கொள்ளத் தைலமும் செய்து தருவதாய்க் கூறி 10-ரூபா வாங்கிக்கொண்டு இன்று நரி முகத்தில் விழித்தோமென்று வீட்டுக்குச் செல்லும் வைத்தியர்கள் எத்தனை பேர்! பிறகு அவர்கள் கொடுக்கும் தைலமும் லேகியமும் பயன்படா. வேறொரு புதிய தைலம் காய்ச்சித் தருவதாய்ச் சொல்லி அந்த வகையிலும் பணம் பெற முற்படுவர்! சில வைத்தியர்கள் ரோகம் தீர்வதற்குள் சில்லரை சில்லரையாய் ரூபாய் 20, 30 வரையிலும் பெற்று விடுவர். அவர்களை விட்டால் வேறு கதியுமில்லை!

## வாயாடித்தனம்

வாயாடித்தனமுள்ள தாய் கூட தன் பெண் வாயாடித் தனமாய் தனக்குச் சமமாக வார்த்தையாடினல் அதைச் சகித்துக் கொள்கிறதில்லை. வாயாடியாயுள்ள அவளே தன் மகளுடைய வாயாடித் தனத்தை வெறுத்துக் கண்டிக்கத் தொடங்கி விடுகிருள். குற்றம் எங்கும் குற்றமே. ஆனல் குற்றம் செய்வோர் மட்டும் அதற்கு ஒரு சமாதானம் சொல்லிக் கொண்டு துணிந்து விடுகிருர்கள்.

## இம் மாதத்திய "ஆநந்த குண போதினி"யின் அநுபந்தம்

வெளி வந்துவிட்டது! இரண்டாம்பதிப்பு!! வெளி வந்துவிட்டது!!!

# அங்கயற்கண்ணி

அல்லது

# அன்புள்ள மங்கை.

[இரண்டு சித்திரப் படங்களுடன் கூடியது.]

இதை எழுதியவர்:

உலகப் பிரசித்தி பெற்றதும் 30,000 காப்பிகள் செலவழிந்ததுமான எமது "ஆங்கில ஆசான்" ஆசிரியர்

**அ. ரா. மாதவராய முதலியார்.**

இது ஒரு துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவல். இந்த நாவலை ஆரம்ப முதல் முடிவுவரையில் எவ்வித வேலை இருந்தபோதிலும் படிக்கத்துவக்கியவர்கள் முடிக்கிறவரையில், புத்தகத்தை கீழே விடமாட்டார்களென்று திடமாகச் சொல்லலாம். இந்த நாவலில் கதா நாயகனாக வரும் உயர் குலத்தில் பிறந்தவனும், அதிக செல்வவந்தனும், படிப்பில்மிக்க தேர்ச்சி உள்ளவனும் பல இடங்களில் மேன்மக்கள் சகவாசமுள்ளவனும், நன்னடக்கை உள்ள ஒருவன் இக்கதையில் கதாநாயகியாய் வரும் அழகில் சிறந்த அங்கயற்கண்ணியின் மீது ஆவல் கொள்வதும், அவளையே விவாகம் புரியவேண்டுமென்ற எண்ணத்தினால் அவன் செய்யும் கொடூரமான கொலையும், பயங்கரமான விஷயங்களும், அதை வேறு ஒருவன் மீது பழிசுமத்துவதும், சமயத்துக்கு ஏற்றவாறு அவனுடைய திறமையும் படிப்பவர்களுக்கு ஊக்கத்தைத் தரும். கதா நாயகியாகிய அங்கயற்கண்ணியின் கற்பை வாசிக்க வாசிக்க, நமது சகோதரர், சகோதரிகளுக்கு மிக்க ஆச்சரியத்தையும், நன்னடக்கையும் உண்டுபண்ணும். இந்த நாவலின் சிறப்பை அதிகமாய் எழுதுவதைச் சுருக்கி காட்டி இருக்கிறோம். (இது 352 பக்கமடங்கியுள்ளது.) சுத்தமான பெரு அச்சில் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1 12 0

ஆநந்த குண போதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1 6

தி. இராஜகோபால முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.